



| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௮, கார்த்திகை | பரல் |
| --- | --- | --- |
| ௩௨ | திசம்பர், **1957** | ௪ |


## பதினைந்தாவது

# ‘உலகச் சைவ உணவாளர் மாநாடு’

### [சைவ வுணவின் தனி மாண்பு]

இம் மாநாடு 1957-நவம்பர்த் திங்கள் 28, 29, 30 (வியாழன், வெள்ளி, சனி), நாட்களில் தென்றமிழ் நாட்டுக் கோநகராம் சென்னையம்பதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் கூட்டம் ‘சென்னைச் சட்டமன்றத்தின்’கண் நிகழ்ந்தது. இம் மாநாட்டைப் பம்பாய் மாநில ஆளுநர் திரு. ஸ்ரீ பிரகாசா துவக்கி வைத்தனர். கூட்டத் தலைமை தாங்கி அணிபெற நடத்திய அம்மையார் திருமதி உருக்குமணி அருண்டேல் ஆவர்.

இம் மாநாட்டுக்கென வெளியுலகச் சான்றோர் பலர் வந்துள்ளனர். அவர் தம் நாடுகள் வருமாறு: அமெரிக்கா, இங்கிலாந்து, கானடா, டென்மார்க்கு, ஆத்திரேலியா, ஆத்திரியா, பெல்சியம், சப்பான், சுவித்தர்லாந்து, பர்மா, துருக்கி, தென் ஆப்பிரிக்கா, இசிரேல் முதலிய இருபத்து நான்கு நாடுகள் ஆகும். அந்நாடுகளிலிருந்து மூப்ப (Delegates) ராய் வந்தார் அறுபதின்மராவர்.

சென்னை மாநில ஆளுநர் திரு. பி. வி. இராசமன்னார், முதலமைச்சர் காமராசர், ஊர்காவலமைச்சர் பத்தவத்சலம், கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம், மாணிக்கவேலு, கே. சந்தானம், இந்திய மாநிலப் படைத்தலைவர் கரியப்பா, இராஜாஜி, டாக்டர் குருசாமிமுதலியார் முதலிய பலரும் பேரவைக்கண் வீற்றிருந்தனர். அவையோரும் நனிமிகப் பலராய் இனிது குழுமியிருந்தனர்.

மாநாடு பலவகைக் கொள்கையினரின் கடவுள் வாழ்த்துடன் துவங்கப் பெற்றது. அமைச்சர் பக்தவத்சலர் அவர்கள் அனைவரையும் வரவேற்று நீண்டநேரம் வரவேற்பு விரிவுரை யாற்றினர். மரக்கறி யுணவால் விளையும் நன்மையினையும், புலாலுணவால் விளையும் புன்மையினையும் விளக்கினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த வள்ளுவரும் இந்நாளிருந்த காந்தியடிகளும் இச் சிறந்த வுண்மையினையே போதித்தனர் எனவும் மொழிந்து "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லா வுயிரும் தொழும்" என்னும் திருக்குறளினையும் எடுத்து விளக்கினர்.

ஸ்ரீ பிரகாசா அவர்கள் துவக்கவுரைக்கண் புலாலுணவினும் மரக்கறி யுணவே பல்லாற்றானும் சிறந்தது. உணவின் அடிப்படையில் எல்லா மக்களுக்கும் ஈவு, இரக்கம், முதலிய நற்பண்புகள் வரவேண்டும். புலாலுண்ணாமல் மரக்கறி யுணவு மட்டும் உண்டு ஈவு இரக்க முதலிய நற்பண்புகள் இல்லாவிட்டால் பயனில்லை என்றனர்.

பிரான்ஃசு நாட்டு டாக்டர் ஜீன்நீயூஸ்பாம் அவர்கள் மரக்கறி யுணவுகளின் நன்மையினையும் தூய்மையினையும் நன்கு விளக்கினர். புலாலுணவின் தீமையினையும் புகன்றனர். புரத சத்து (Protein) மரக்கறி யுணவில் மிகுதியாக விருக்கின்றது. எடுத்துக்காட்டாகப் பீனிசு முதலிய காய்கறிகளைக் காண்க என்றனர். மேலும் காய்கறிகளால் ஏற்படும் புரதசத்துத் தூய்மையானது. நச்சுப்புழுக்களை உண்டாக்காதது. புலாலுணவினாலாம் புரதசத்து நச்சுப்புழுக்களை யுண்டாக்கக் கூடியது. இத்தகைய பேரிடர் புலாலுணவிலிருக்கின்றது என்றனர். மேலும் பிரான்ஃசு நாட்டில் மூவாயிரம் குடும்பம் சைவ வுணவு, உண்டு மதுக்குடி, புகைக் குடியின்றி வாழ்கின்றனர் என்றனர்.

இராஜாஜி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள 'மரக்கறிப் பொருட்காட்சி'யை மைசூர் மாநில ஆளுநர் திரு. ஜெயசாமராச உடையார் அவர்கள் திறந்து வைத்தனர். சைவ உணவாளரின் வாழ்வில் ஒருவகை அமைதியும் தூய்மையும் காணப்படுகின்றன. நல்ல உளத்திற்குப் புலாலுண்ணாதிருத்தலே மிக்க பயன் சேர் துணையாகின்றது. அதனாலேயே மேனாட்டுச் சான்றோராகிய பித்தாகொரஸ், பிளேட்டோ, அரிஸ்ட்டாட்டில் போன்றவர்கள் சைவ உணவையே உட்கொண்டு, அவ் வுணவின் தனி மாண்பில் நம்பிக்கையும் கொண்டுள்ளனர். பண்டைக்காலத்தில் ஏராளமான மரக்கறி யுணவு கிடையாமையால் முன்னோர்கள் புலாலுண்டனர். இப்பொழுது அந்நிலைமை மாறிவிட்டமையால் இந்நாளில் புலாலுண்ண வேண்டிய கட்டாயமே இல்லை.

எல்லாரும் தூய மரக்கறி யுணவே யுண்டு மகிழ்வுடன் வாழலாம் என்றனர்.

ஐம்பதுக்கு மேற்பட்ட காய்கறிக் கடைகள் வந்துள்ளன. சைவ வுணவின் இன்றியமையாத் தேவை, முதன்மை பற்றிய பல செய்திகள் பொருட் காட்சியில் புலப்படுமாறு சீருற அமைக்கப்பட்டிருந்தன. மண்டபத்தின் முன்பு இந்து, புத்த, சைனக் கோபுரங்கள் காய்கறிகளால் அமைக்கப்பட்டு நிறுவி யுள்ளது மிக்க அணி செய்தது.

சைவ உணவின் மாநாட்டுக்குப் பர்மாவினின்றும் வந்த உறுப்பினர் பர்மா மாநில ஆட்சியாளர் ஆட்சி விடுமுறை நாட்களில் விற்பனையின் பொருட்டுக் கொல்லும் இடங்களில் ஆடு மாடுகளைக் கொல்லும் கொடுமைகள் செய்தல் ஆகாது என விதித்துள்ளனர். இம் முறையினை ஏனைய நாட்டவரும் கைக்கொள்ளுதல் நன்றாகும் என்றனர். பர்மாவில் புத்த சமயத்தவர்களில் பலர் சைவ வுணவினராக இருக்கின்றனர், என்றனர்.

இங்கிலாந்திலிருந்து வந்த W. A. சிபிலி என்பவர் இங்கிலாந்தில் ஒரு நூறாயிரவர்க்குமேல் சைவ உணவினராக வாழ்கின்றனர் என்றனர். மற்றோர் உறுப்பினர் போலந்து, செக்கசோலேவியா, சைனாவிலும் கூடுதலாகச் சைவ வுணவாளரிருக்கின்றனர் என்றனர். மேலும் அவர்,

மரஞ் செடி கொடியில் வல்லுநர் எனப் பெயர் படைத்த 'ரிச்சர்டு சென்ட் பார்ப் பேக்கர் உணவின் மாட்சியை விளக்குங்கால் உண்மை நினைப்பாளர்கள் சைவ உணவினாலேயே ஆகின்றனர் என வலியுறுத்தியுள்ளார்' எனவும் மொழிந்தனர்.

சைவ வுணவாகிய காய்கறிகளின் வலியினை உணர்த்த நடத்தப்பட்ட உலக ஒலிமபியா கடுமுயற்சி விளையாட்டுப் போட்டியில் 'பர்ரேரோசு' என்னும் பதினேழாண்டுக் கட்டிளைஞனை சைவ வுணவினன், வென்று மூன்று பொன் மெடல் பெற்றுள்ளனன். மேலும் பல போட்டியிற் கலந்து பல மெடல்களும் பெற்றுள்ளனன். இவன் பிறவி முதலாகவே சைவ வுணவு உண்டு வளர்ந்தவன் எனவும் தெரிகின்றது.

பெர்லின் பல்கலைக்கழக நடைப் போட்டியில் சைவ வுணவாளர்களே அறுவர் முன் வந்து வென்றன ரெனவும் தெரிகின்றது. மேலும் இருவர் வழிதப்பிப் போயினராம்; அல்லாவிடில் எண்மராவர் எனவும் கூறப்படுகின்றது. ஏனைப்புலாலுணவினர் நெடும்பொழுது கழித்தே வந்துள்ளனராம்.

டாக்டர் குருசாமி முதலியாரவர்கள், சைவ வுணவினால் ஏற்படும் ஆற்றல் தொடர் ஒளிபோன்று என்றும் நிலையாக நிற்ப தென்றும், புலாலுணவினால் ஏற்படும் ஆற்றல் பெரிய வெடி வெடித்து உண்டாகும் ஒளிபோன்று உண்டவுடன் தோன்றி மறைந்து போவதென்றும் கூறினர். மேலும் மிக்க வலிவும், தாங்கும் ஆற்றலும், பேருழைப்புச்செய்யும் வன்மையும் சைவ உணவாகிய மரக்கறி யுணவினாலேயே அமைவதெனவும்,எடுத்துக் காட்டாக எருது, கோவேறுகழுதை, குதிரை, யானை, ஒட்டகை முதலிய அமைதியாகிய விலங்கினங்கள் புல், இலை, குழை, கூலங் களாகிய சைவ வுணவினைத் தின்பதாலே இத்துணை வலிவு ஏற்பட்டு உழைக்கின்றன எனவும் கூறினர். மிக்க வலிவு படைத்த காண்டாமிருகமும் இலை குழை யுணவினையே உண் கின்றது எனவும் கூறினர்.

புலி முதலிய கொடு விலங்குகள் பாரம் தாங்கும் வலிவும் கடுவுழைப்பு உழைக்கும் ஆற்றலும் உள்ளவைகளல்ல. வாய்ப்புப் பார்த்துத் திடீரெனப் பாய்ந்து கொல்லும் திறனுடையன. ஆனால் நின்று நெடுநேரம் போர் செய்யும் ஆற்றலுடையனவுமல்ல. இதனால் மக்களுக்கு நிலையான வலிவும் நலமும் கொடுப்பது சைவ வுணவே. உடல் வளர்ச்சிக்கு வேண்டிய புரதசத்து, கொழுப்பு, கார்ப்போஹைட்ரேட்டு போன்றவை அரிசி, பயறு வகைகள், பழங்கள் ஆகியவற்றில் ஏராளமாக அமைந்துள்ளன என்றனர். மரக்கறி உணவில் காணப்படும் புரதசத்து எளிதில் செரிக்கக் கூடியது. மாமிச உணவினால் கிடைக்கக்கூடிய சத்தி மிகுதியாகத் தோன்றினாலும் அப்பொழுதைக்கு மட்டுமே உள்ளதாகும். மேலும் குருதியழுத்தம் மாமிச உணவினால் மிகுதிப்படும். மரக்கறி யுணவில் இத்தகைய கேடு அவ்வளவாகவில்லை. மாமிச உணவின் ஏதுவினால் உடலில் நஞ்சு ஊடுருவவும் வாயிலுண்டு, எனவும் கூறினர்.

மைசூர் மத்திய உணவு ஆராய்ச்சி நிலைய ஆய்வாளர் டாக்டர் சி. சுப்பிரமணியம், சென்னை டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் ஆகியோரும் மரக்கறி யுணவினால் ஏற்படும் நன்மைகளை விளக்கிப் பேசினர்.

இஞ்ஞான்று உலக நலத்தின் பொருட்டும், மாந்தர்களின் ஒழுகலாற்று நல்வாழ்வின் பொருட்டும், ஈவு, இரக்க, அறங்களின் பொருட்டும், அன்பு அருள் இன்ப நலங்களின் பொருட்டும், பொருள் நிலைச் செழிப்பின் பொருட்டும், அகம்புறத் தூய்மை யின் பொருட்டும், அழகின் பொருட்டும், அமைதியின் பொருட்டும், ஆற்றலின் பொருட்டும், நோயின்றி நெடுநாள் வாழும் வாழ்க்கையின் பொருட்டும், எல்லாம் வல்ல இறைவன்

வழிபாட்டின் ஏற்றத்தின் பொருட்டும், இனிமைப் பண்பின் பொருட்டும் சைவ வுணவின் தனி மாண்பு பரந்த உலகத்துப் பல்வேறு நாட்டுப் பல்வேறு சான்றோர்களின் தனிப் பெரு முயற்சியின் பயனாக அரை நூற்றாண்டுகளாக உலக இயக்கமாக மிளிர்ந்து எங்கணும் பரவிப் பயனளித்து வருகின்றது. இம் முயற்சி இலண்டன்மாநகரில் 1847-ஆம் ஆண்டு 'புலாலுண்ணா வியக்கம்' எனத் துவங்கப் பெற்றதாகத் தெரிகிறது. இதன் முதல் மாநாடு 1908-ஆம் ஆண்டு 'டிரஸ்ட்டெண்டு' மாநகரில் நடந்துள்ளதெனவும் தெரிகின்றது.

இத்துணைச் சிறந்த பண்பாடு நம் பரதகண்டமாகிய இவ் விந்திய நாட்டில் வட பெருங்கல்லாகிய இமயம் முதல் தென் பெருங் குமரிக்கோடு வரை வாழ்ந்த நம் பழந்தமிழ் முன்னோர்கள் வழிவழிச் சிறப்பாகக் கையாண்டுவந்த தொன்றாகும். இக் காலம் வரலாற்றுக் காலத்துக்கும் ஆரியர் வருகைக்கும் முன் பல்லாயிர ஆண்டுகள் சென்றனவாகும். இச் சைவ வுணவுப் பண்பாட்டினையும், அதன் அடிப்படைத் தொடர்பாம் சிவ வழிபாட்டினை யும் உண்மையாகக் கைக்கொண்டு உலகெங்கணும் பரப்பி எல்லார்க்கும் உய்யும் நன்னெறி காட்டிய நல்லாரும் நம் பண்டைச் செந்தமிழ்ச் சான்றோரே யாவர்.

ஏறத்தாழ இச் சான்றோர் வாழ்ந்த காலம் பதினாயிரம் ஆண்டுகளுக்குமுன் என்ப. அக்கால அகச்சான்று புறச்சான்று களை ஆய்ந்து முடிவு செய்தற்குக் கருவியாகிய நூல்களும் அச் சான்றோர் வாழ்ந்த நாடுகளும் முதலூழிக் காலத்துக் கடல் கோளால் அழிந்து போயின. இப்பொழுது நம் தவப்பேற்றால் நமக்குக் கிடைத்துள்ள தனித்தமிழ் முழுமுதல்நூல் எம் மொழியிலும் அமையாத பொருளதிகாரத்தோடு பொருந்திய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பிய முனிவரனால் இயற்றி யருளப்பட்ட தொல்காப்பிய மென்னும் அரிய பெரிய இலக்கண நூலேயாம். இந் நூல் தலைச்சங்க காலத்து இயற்றப்பட்ட தொன்றெனவும், அஃது இற்றைக்கு ஐயாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதெனவும் வலிய சான்றுகள் பல காட்டி ஆசிரியர் மறைமலையடிகளாரவர்கள் தம் அரிய பெரிய ஆராய்ச்சி நூலாகிய 'மாணிக்கவாசகர் காலம்' என்பதன்கண் தெளி வுறுத்தித் துணிவு பெற நாட்டியுள்ளார்கள். அதன்கண்ணும், இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளுக்குமுன் திருவள்ளுவ நாயனாரால் அருளிச் செய்யப்பட்ட உலகப் பொதுமறையாம் திருக்குறளின்கண்ணும் சைவ வுணவின் தனி மாண்பு முறையே தொகையாகவும் விரியாகவும் காணலாம். இவ் விரண்டற்கும் இடைப்பட்ட சங்க மருவிய நூல்களில் வகையாகவும் காணலாம்.

சைவ வுணவினையும், அருளொழுக்கப் பண்பினையும், தனிப் பெரு நாகரிகத்தையும் இடைவிடாது வழிவழியாகக் கைக் கொண்டு ஒழுகி உலகெங்கணும் பரப்பி உய்யக் கொண்டவர்கள் செந்தமிழ்ச் சீரிய வேளாளரேயாவர். அவ் வேளாண் மாந்தர் சைவவேளாளர் எனவும், சைவர் எனவும் முதன்மையாக அழைக்கப்பெறுவர். அப் பெருந்தகையோர் உலகினை உடையாலும் உணவாலும், உணர்வாலும், உய்யு நெறியாலும் ஒல்லும் வகை ஓவாது ஓம்பும் செல்வத்தராவர். பண்டைக் காலத்து அவ் வேளாளர்களே தம்மில் நின்றும் தகுதியுடையாரை 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் உறுதிப் பொருள் நான்கும் உலகிடை நிகழ்தற்பொருட்டு முறையே அந்தணர், அரசர், வணிகர், வேளாளரென "வேற்றுமை தெரிந்த நாற்பால"ராகத் தோற்றுவித்தனர்.

தொல்காப்பியத்தின்கண் 'சிவன்' என்னும் திருப்பெயர் 'சேயோன்' என்னும் பெயரான் வழங்கப்படுவதாயிற்று. சேயோன் என்பது நிறத்தால் செந்நிறத்தோன் எனவும், பண்பால் செம்மையோன் எனவும் இருபொருள் பயக்கும் ஒரு பெரும் மறைமொழி. இவ்வுண்மை அப்பரடிகள் அருளிய "சிவனெனு நாமம் தனக்கேயுடையசெம் மேனியெம்மான்" என்னும் செந்தமிழ்ச் சிறப்புத் திருமறையான் உணரலாம். சிவனைத் தொழுவோர் சைவர் எனப்படுவர். அம்மட்டுமன்று, சிவன் உவந்தளித்த உணவாகிய நிலைத்திணை[1] உணவினை உண்போரும் சைவர் எனப்படுவர். இவ் வுண்மையினைப் புலனெறி வழக்கானும் உலகியல் வழக்கானும் சைவ வுணவெனவும், அவ் வுணவுண்போரைச் சைவர் எனவும் வழங்கி வருகின்றமை புலப்படுத்தும் ஒரு கிறித்துவ நண்பரும், ஒரு மகமதிய நண்பரும் தம்மில் சிலர் புலவுத் துறந்து, நலவாம் மரக்கறியுணுக் கொண்டு சிறந்து வாழ்வாரை இவர் சைவ வுணவு உண்டு சைவராகிவிட்டார் என இயல்பாக மொழிகின்றனர். இருவேறுணவும் ஒருங்கு நல்கும் சில விடுதிகளில் இங்குச் 'சைவ வுணவும், படை உணவு (மிலிட்டேரிச் சாப்பாடு)ம் கிடைக்கும்' என விளம்பரப் படுத்தியிருப்பதை நாட்டிடை நாம் இன்றும் காண்கின்றோம். அதனானும் சைவவுணவின் மெய்ப்பொருள் தானே விளங்கும்.

தொல்காப்பியத்தின்கண் வேளாண் மாந்தர் சிறப்புப் பின் வருமாறு ஓதப்படுகின்றது:

"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி." (தொல். மரபு-அ0)

1. நிலைத்திணை: மரஞ்செடி கொடி வகையாகிய தாவரம்.

வேளாண் மாந்தர்க்கு உழுதூண் சிறப்புத் தொழிலாகும். ஏனை அருமறை பகர்ந்து பூசனை புரிதலும், நாடு காத்தலும், வாணிகம் புரிதலும் வேளாளர்க்குப் பொதுத் தொழிலாகும். இப் பொதுத் தொழில்கள் அவர்க்கு இயல்பாக வுள்ளனவாகும். தொன்றுதொட்டு சைவ வேளாளர் கற்பித்தலும் கடவுட் பூசனை புரிதலும், அறமுறை செய்து நாடு காத்தலும், கொண்டுவிற்ற லாகிய வாணிகம் புரிதலும் பொதுவும் சிறப்புமாகப் புரிந்துவந் தனர். அவ் வுண்மை ஆதிசைவர், வேள், சைவச் செட்டி என்னும் மரபுப்பெயரான் இனிது பெறப்படும் இந் நிகழ்ச்சிக ளெல்லாம் உணவினாலேயே நிகழவேண்டும். ஆதலின் இம் முத்திறத்தார் செய்யும் நிகழ்ச்சிகளும் அவ் வேளாளர் நிகழ்ச் சியேயாகும். அக்கருத்தான் 'பிறவகை நிகழ்ச்சி இல்லென மொழிப' என ஓதினர்.

திருவள்ளுவ நாயனாரும்,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்." (க0௩௩)

இதன்பொருள்: ஏனையாரை வாழ்வித்து வாழ்வாரே வாழ் வாராவர். எல்லா வாழ்வும் உணவினாலாவதும் உணவின் பொருட்டு ஆவதுமேயாம். அதனால் உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்றனர். அஃதொழிந்த ஏனை முத்திறத் தொழிலின ரெல்லாரும் அவ் வேளாளரைத் தொழுது அவர் சொல்வழி நிற்போராவர் என்பதாம். பின் செல்லுதல்: சொல்வழி நிற்றல்.

ஏனைப் பதினெண் குடிமக்களையும் தொல்காப்பியனார் இரு பிரிவில் அடக்கினர். அவ்விருவரும் அடியோரும் வினைவலரும் ஆவர். ஒருவரைச் சார்ந்து தொழில்புரிவோர் அடியோராவர். தாமே தொழில்புரிந்து கூலியோ விலையோ பெற்று வாழ்வோர் வினைவலராவர். இவ்வுண்மை வரும் தொல்காப்பியச் சூத்திரத் தான் உணர்க:

> "அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
> கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்."
> (தொல். அகத்திணை-உ௩)

கடவுள் வழிபாடும் சிவபெருமான் மேற்றேயாம் என்பது தொல்காப்பியத்தின்கண் "மாயோன், சேயோன், வேந்தன், வருணன்" என ஒரு முழுமுதற்குரிய பல்வகைநிலைப் பல்பெயரா னும் "கொடிநிலை கந்தழி வள்ளி" யென்னும் மூவொளிப் பண்புப் பெயரானும் செவ்விதிற் புலனாம். இவற்றுள் வேந்தன் திருமுடி சூடினோன் - சிவபெருமான். கந்தழி, ஒளிப்பிழம்பு - சிவபெருமான். 'கொடிநிலை, கந்தழி, வள்ளி' என்பன முக்கண்

ளைக் குறிக்கும் குறிப்பாகும். முக்கண்ணன் என்னும் திருப் பெயர் சிவபெருமானுக்கே யுரிய தனிச் சிறப்புப் பெயராகும்.

வேளாளர் உண்டுவந்த சைவ உணவே நோன்புணவு அல்லது படிவவுண்டி என வழங்கப்படுவதாயிற்று. ஆண்டவனின் ஆணை மீறிய புலாலுணவு கொலையுணவாயிற்று. அவ்வூண் உண்பார் புலையரென இழித்துக் கூறப்பட்டனர். அவ்வுண்மை ஐங்குரவருள்[1] ஒருவராகிய திருமூல நாயனாரருளிச் செய்த தனித்தமிழ் வேதாகமமாகிய திருமந்திரத்தின்கண் வரும் திருப்பாட்டா னுணர்க:

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே." (உசஉ)

திருவள்ளுவ நாயனார் புலாலின் இழிவைக் குறித்து ஓதுங்கால் அஃது 'உணவன்று புண்' என்று அறிவுறுத் தருளினர். அது வருமாறு:

"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்." (உகூஎ)

மேலும் ஒருவன் தன்னுடம்பினைப் பெருக்குவதற்கு ஆண்டவனருளிய சைவவுணவினையே உண்ணுதல் வேண்டும். அதற்கு மாறாக ஆண்டவன் வேறோர் உயிர்க்குக் கொடுத்தருளிய உடம்பினை உண்பது எங்ஙனம் பொருந்தும்? அவ்வூனை உண்பான் அருளை எங்ஙனம் மேற்கொள்வன்? என வள்ளுவப்பெருந்தகையார் வினவுகின்றனர். பொருந்தாது என்பதும், கொள்ளான் என்பதும் விடையாகும்.

உயிர் நீங்கிய உடம்பினைப் பிணம் என்பது அவ்வூன் தின்பார்க்கும் உடம்பாடு. அத்தகைய பிணத்தினை யுண்பது நாய் நரி பேய் கழுகு காக்கை முதலியன அன்றோ? மக்களும் உண்பாராயின் அவரை எப்படி நல்லறிவுடையா ரென்று நல்லோர் நவில்வர்? குற்ற நீங்கிய நற்றார் என எங்ஙனங் கூறுவர்? அவ்வுண்மை வரும் செந்தமிழ்ப் பொதுமறையான் உணரலாம்:

"செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்." (உகூஅ)

இவ்வூன் போய்த் தங்கும் வயிற்றினைச் சுடுகாடெனவே நாலடியார் கூறுகின்றது. அதுவருமாறு:

---

1. 'நால்வர்நம் மூலர் நயந்தெமையாள் ஐங்குரவர்
சால்பாம் சிவயசிவ சார்ந்து.'

" துக்கத்துள் தூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு." (௧௨௧)

இந் நாலடியார் 'வேளாண் வேதம்' என மேலோரால் வழங்கப்படும்.

வந்தேறுங் குடிகளாகிய ஆரியர் ஒரு வரைதொகையின்றி ஊனுண்டல், கட்குடித்தல், சூதாடல், கொலைபுரிதல், பிறமகளிரை மருவுதல் செய்வதாகிய பாவச் செயல்களைப் புரிந்து வந்தனர். இப்பெருங் கொடுஞ்செயல்களைப் புரிவதோடமையாது கொலையும், குடியும் தங்கள் தெய்வங்களுக் குவப்பினைத் தருவதென்றும், அவைகட்கு உடம்பாடென்றும், வேள்வியென்றும், வேள்விக்கட் செய்யும் கொலை கொலையாகாதென்றும், ஆண்மகனைக் கொன்று வேள்வி வேட்டல் மிகச் சிறந்ததென்றும் கூறி உலகினை மயக்கிப் பொய்க் கதைகளைப் புனைந்து கட்டி வரவரப் பெருக்கி வருவாராயினர். அம்மட்டோ? இப்பொய்ம்மை உரைக்கு மொழி தேவமொழியென்றும், இவையடங்கிய நூல் வேதம் என்றும், இவற்றை மேற்கொள்ளும் தாங்கள் பூதேவர் என்றும் பொய் புனைந்துரைத்து மருட்டினர். இவ் வுண்மை அவ்வாரியப் பார்ப்பனர் கட்டிய இருக்கு வேதம் பத்தாம் மண்டிலத்துப் பரக்கக் காணலாம்.

இப் புன்மையினை வன்மையாகக் கண்டித்து நம் நாயனர் நவின்றமை வருமாறு :

" அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று." (௨௫௯)

எனவும்,

" தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்." (௨௫௬)

எனவும்,

" நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை." (௩௨௮)

எனவும் வருவன காண்க.

மேலும், சைவ வுணவாளராகிய அருளறப் பண்பினர் வையத்து வாழ்வாங்கு வாழும் வாய்மைத் தூய்மையராவர். அவரை எல்லாவுயிரும் தொழும். அவர் இறையடி நீழலெய்தி நிறையின்பம் துய்ப்பர். இவ் வுண்மை வரும் திருவள்ளுவப் பயனால் உணர்க :

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்." (உகூ0)

"அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்." (௩கூஎ)

இவற்றான் நாம் உளங்கொள்ள வேண்டிய பேருண்மை, புலாலைத்தானுண்ணுமையோடு பிறர் உண்பதனையும் மறுத்தல் வேண்டுமென்பதும், அவாவினைத், தான் அறுத்துப் பிறர்க்கு வழிகாட்டவேண்டும் என்பதுமேயாம். பொய்யாநாவிற் புலவராகிய நம் செந்தமிழ்ச் சான்றோர் புலாலுணவே கொள்ளும் புலைப்புள்ளும் நிலச் சார்பால் அருள் நீங்காதுண்ணும் என அறிவுறுத்துவாராயினர். அது வருமாறு:

"கரைகவர் கொடுங்கழிக் கண்கவர் புள்ளினம்
திரையுறப் பொன்றிய புலவுமீ னல்லதை
இரையுயிர் செகுத்துண்ணுத் துறைவனை யாம்பாடும்
அசைவரல் ஊசற்சீர் அழித்தொன்று பாடித்தை."
(கலித்தொகை, க௩க)

இதற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரை வருமாறு:

'அதுகேட்ட தலைவி, கரையை யிடித்துத் தனக்காக்கிக் கொள்ளுகின்ற கொடுங்கழியிடத்து நோக்கினார் கண்ணை வாங்கிக் கொள்ளும் அழகையுடைய பறவைத்திரள் திரை மோதுகையிலுலே இறந்த புலானாற்றத்தையுடைய மீனை இரையாகத் தின்னும் அல்லது தாம் ஒன்றன் உயிரைப் போக்கி இரையாக அதனை உண்ணாத அருட்டுறைவனை நாம் பாடும் அசைந்து வருதலையுடைய ஊசற்பாட்டை, நீ இயற்பழித்ததனை யழித்து, இயற்பட ஒன்று பாடுவாய் என்றாள்;'

இதன் உண்மை உயர்வினை வரும் பொய்யாமொழியான் உணர்க:

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை." (௩உஎ)

நம் சைவவுணவின் மாண்பு 1908-ஆம் ஆண்டில் 'கோமகன்' (Lord) பேடன்பவல் உற்றுழியுதவும் ஒரு பெருந் தொண்டராம் சாரண இயக்கத்தின் பொருட்டு வரைந்த "சிறுவர் சாரணர் இயக்கம்" என்னும் நூலில் "பல நோய்களுக்கும் காரணம் அளவிறப்ப உண்டலும், பொருந்தா வுணவுமே யாகும் என்பதும், ஒரு சாரணத் தொண்டன் பொருந்தும் உணவினை யுண்டு தன்னை எளிதாகவும் சுருசுருப்புள்ளவனாகவும் ஆக்கிக் கொள்

ளுதல் வேண்டும் என்பதும், எஸ்டாஸ்மில்ஸ் என்னும் முன்னாள் பந்தாட்ட வல்லுநர் புலால் உண்டதே இல்லை என்பதும், புலா லுண்பது ஆரவாரமிக்க வீண் செலவே யாகுமென்பதும் பிறவும்' நன்கு வலியுறுத்தப்பட்டுள்ள தென்பது ஈண்டுணர்ந்து இன்புறத்தக்கதொன்றாகும். மேலும் மேனாட்டு நாடகப் பேராசிரியரும் உலகப் புகழ்பெற்றவருமான 'பெர்னாட்சா' துரைமகனாரும் சைவ வுணவினரே என்பதும் நினைவுகூர்க.

நிறைவு நாள் பேரவை டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் தலைமைக்கண் மிகவும் சிறப்பாக நிகழ்ந்தது. வெளி நாடுகளிலிருந்து வந்துள்ள அறுபது மூப்பர்க்கும் தனித்தனி பொன்னரி மாலையும், குத்துவிளக்கும் அன்பளிப்பாக வழங்கப் பட்டன. தலைவர் விரிவுரையில் ஒரு ஏகர் நிலத்தில் உண்டா கும் காய்கறி கூலம் முதலிய உணவு புலாலைவிட மலிவான தென்பதும், நல்ல காய்கறி யுணவு புலால் உணவினும் ஆற்றல் மிகுந்து, நிறையுணவாய் நலன் பயக்கின்ற தென்பதும் இம் மாநாட்டின் வாயிலாக வெளிப்பட்டன எனவும் கூறினர்.

மேலும் காய்கறி உட்கொள்ளும் நாடுகளில் நம் பரதகண்ட மாகிய இந்தியா முன்நிற்கும் ஒரு பெருநாடு எனவும், நாம் உட் கொள்ளும் சைவ உணவிலுள்ள சத்துப்பொருள் மதிப்புப்பற்றி நாம் போதுமான ஆராய்ச்சி செய்யவில்லை என்பதை ஒத்துக் கொள்ளுதல் வேண்டுமெனவும், காய்கறி உணவின் சிறப்புப் பற்றியும், தன்மை பற்றியும் விளக்க விரிவுரையோ, பொருட் காட்சியோ நடத்தப்படவில்லை யெனவும், இவ்வகையான நடவடிக்கை இன்றியமையாததெனவும் கூறினர்.

சில நாடுகளில் மிகுதியான உணவு உட்கொள்ளப்படுகின்ற தென்றும், சில நாடுகளில் பட்டினிகிடக்கக் காண்கின்றோ மென்றும், இம் மேடுபள்ளத்தைப் போக்க வேண்டுமாயின் பங்கீட்டு முறையில் தக்க ஏற்பாடு கையாளப்பட வேண்டுமென் றும், எல்லார் உள்ளத்துந் தோன்றும் மெய்ம்மை இம் மாநாட் டின் விளைவாய் வெளியாயின எனவும் கூறினர்.

இச் சைவ உணவாளர் மாநாட்டின் பெறுபேறாக உலகெங் கணும் சைவவுணவு பெருகி எல்லாரும் சைவராய் அதன் பயனாக ஆன்றவிந்தடங்கிய கொள்கையாம் அமைதியும், அருளிரக்கப் பண்பும், அன்பறிவு நண்பும், ஒற்றுமையும் ஒழுக்கமும், இன்பநல வாழ்வும், நீண்ட அகவையும், ஆண்டவற் றொழுது அடிமைபூண்டுய்தலும், வேண்டிய வேண்டியாங்குப் பெற்று மகிழ்தலும் மேன்மேலும் நிலவுவவாகுக.

---

# பாட நூல்கள் வெளியீடு

## அரசினர் எண்ணித் துணிதல் நன்ரும்

பாடப் புத்தகங்கள் வெளியிடும் தொழிலை ஆட்சியினர் மேற்கொள்வதென்ற முடிபை மீண்டும் எண்ணிப்பார்த்தல் நன்ரும். இது குறித்துப் பல்வேறு நிலையங்களின் வாயிலாக வெளிப்போந்துள்ள வேண்டுகோளையும் ஆட்சியினர் குறிக்கொண்டு நோக்குதல் வேண்டும்.

தற்போது பாடப்புத்தகங்கள் தேர்ந்தெடுக்கும் முறை செம்மையாக அமைந்துள்ளது. பாடப்புத்தகங்களின் தரம் உயரவேண்டுமென நினைந்தால் அம்முறையில் வெளியிடுமாறு கட்டளை பிறப்பிக்கலாம். எப்பொழுதும் கலை வளர்ச்சி உயர வேண்டுமானல் போட்டியின் அடிப்படையிற்ருன் உயர முடியும்.

கலைவல்ல ஆசிரியர்களின் நுண்மாண் நுழைபுல அறிவு நாளும் மேலும் மேலும் ஓங்கிவளர்ந்து மிளிர்வதற்கு அவர்கட்கு நிலைபேருன உரிமை வேண்டும். அதுபோல் வெளியீட்டுக் கலை வளர்ச்சிக்கும் வெளியீட்டு நிலையங்கள் பல இன்றியமையாது வேண்டப்படும். இவற்றிற்கு முற்றும் மாருக ஆட்சியினர் இவற்றை மேற்கொண்டனராயின், ஒரே நிலையாய்ப் போட்டி வளர்ச்சியின்றிப் போய்விடும்.

மேலும் பாடப்புத்தக வெளியீட்டின் துணையினலேயே பல ஆண்டுகள் வரை மெல்ல மெல்ல இருந்து விற்கும் அருங்கலை நூல்களையும் வெளியீட்டாளர் வெளியிடுகின்றனர். இப் பெரும் பணிக்கும் இனிமேல் ஈடு செய்யவொண்ணுப் பேர்இடர் உண்டாக லாம். அதனல் கலைவளர்ச்சியும், மொழிவளர்ச்சியும், பண்டைய அருஞ் செல்வமாம் பனுவல்கட்குப் புத்துயிரளித்துப் பேணி வரும் விழைதகு விழுமிய முயற்சியும் தடைப்படும். ஒன்றிரண்டு மூன்று முதலிய இளஞ்சிறு வகுப்பிலுள்ள மாணவர்களை எண்ணிக் கணக்கெடுப்பதும் அவர்கள் அனைவர்கட்கும் குறித்த காலத்துக்குள் புத்தகங்கள் கைக்குக் கிடைக்கும்படி சேர்ப்பிப்பதும் எளிதில் நிறைவுறுவனவாகா. மேலும் அவ் இளமாணவர்கட்கு அடுத்தடுத்துக் கிழிபடுவதாலும், போக்கடிக்கப் படுவதாலும் வரையறையின்றிப் புத்தகங்கள் வேண்டப்படும். அவற்றையெல்லாம் முன் எண்ணி அமைப்பதும் அத்துணை எளிமையாகாது.

ஆட்சியினர் வாயிலாகப் பாடப்புத்தகங்கள் வெளிவருமாயின் பல நூலாசிரியர்களின் பிழைப்பும், அச்சகத்தார், அச்சுத்

தொழிலாளர் பிழைப்புகளும், ஒப்புநோக்கிச் செப்பஞ் செய் (Proof Reader)வார் பிழைப்பும், நூலுக்கு வேண்டும் ஓவியம் எழுதியுதவும் ஓவியவல்லார் பிழைப்பும், அவ் வுருவங்களை அச்சுருவாக்கி நல்கும் அச்சுருவத் தொழிலார் பிழைப்பும், அச்செழுத்து அழகுற ஆக்கி அமைப்பார் பிழைப்பும், தாள் விற்பனையாளர் பிழைப்பும், நூல் வெளியீட்டார் பிழைப்பும், கொண்டு விற்பார் பிழைப்பும், இவர்களைச் சார்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான அலுவலாளர்கள் பிழைப்புந் தடைப்பட்டு, நாட்டிடையே மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பெருகிப் பல குழப்பங்கள் தடுக்கமுடியாதபடி உண்டாகலாம். இவற்றையெல்லாம் நன்காய்ந்து ஆவன புரிவதே நன்காகும்.

உரிமைப் பண்போடு பல ஆசிரியர்கள் பாடப்புத்தகங்கள் எழுதும்போது அவர்கள் தாமாகவே எவ்வெம் முறையில் அவற்றை அழகுபெற அமைக்கலாமென்று எண்ணி எண்ணி ஒவ்வொரு ஆண்டும் நல்ல முறையில் வளர்ச்சி பெற ஆக்கிக் கொண்டே வருவர். இவற்றையெல்லாம் அரசினர் நன்கு எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

மேலும், பாடநூல்களை அரசியலார் வெளியிட முன்வருவது எத்துணை இடர் பயக்கவல்லது என்பதைப் பள்ளி ஆசிரியர்க் கழகங்கள், தமிழாசிரியர்க் கழகங்கள், தலைமை ஆசிரியர்கள், நூல் வெளியீட்டுக் கழகங்கள், இன்னபிற கழகங்கள் நன்கு எடுத்துக்காட்டியுள்ளன. அன்றியும் 'இந்து', 'மெயில்', 'சுதேசமித்திரன்' முதலிய சீரிய நாளிதழ்களும், கல்கி, ஆனந்த விகடன் முதலிய கிழமை இதழ்களும் இதனைக் கண்டித்து எழுதியுள்ளன. திரு. சி. இராசகோபாலாச்சாரியார், சர். சி. பி. இராமசாமி ஐயர் முதலிய மூதறிஞர்களும் அரசியலாரின் இம்முயற்சி நல்லதல்ல என்பதை எடுத்துக்காட்டியுள்ளனர்.

இங்ஙனம் பல்லாற்றானும் பொதுமக்களால் விரும்பப்படாத ஒன்றினை அரசியலார் ஆராய்ந்துபாராமல் செய்யப்புகுவது அறமும் அன்று, முறையுமன்று, மக்களாட்சிப் பண்புமன்று என்பதை வலியுறுத்திக் கூற விழைகின்றோம். எனவே எண்ணித் துணிதலே நன்றாம்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. (குறள்)

# தமிழரின் பழமையும் புதுமையும்[1]

[மறைத்திரு. மறைமலை அடிகளார்]

" இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந் திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே."

(தொல்காப்பியம், களவியல், க)

தமிழ் மக்களின் பழைய நிலைமையினையும் அவர் இப்போ தடைந்திருக்கும் புதிய நிலைமையினையும் யாம் ஆராயப் புகுகின் றமையின், எமது விரிவுரைக்குத் 'தமிழரின் பழமையும் புதுமை யும்' எனப் பெயரமைக்கலாயிற்று. எந்த நாட்டில் எந்தக் காலத் தில் இருப்பவராயினும், பொதுவாக எல்லா நாகரிக மக்களின் வாழ்க்கையும் செந்தமிழ்த் தொல்லாசிரியரான தொல்காப் பியனார் இச் சூத்திரத்தின்கண் அருளிச் செய்திருக்கும் 'இன்ப மும் பொருளும் அறனும்' என்னும் மூன்று பகுதிகளில் வைத்து ஆராய்ந்து தெளிந்து கொள்ளப்படும். நாகரிகம் இல்லா மக்கள் பல்லாயிரக்கணக்காய் இவ் வுலகம் எங்கணும் ஆங்காங்கு மலிந் திருப்பினும், அவர்களது வாழ்க்கையானது ஒரு வரம்புக்குள் அடங்கி, இன்பமும் பொருளும் அறமும் என்னும் இம் மூன்று வகையில் வைத்து ஆராய்ந்தறிதற்கு எளிதின் இடந்தராது; ஆகவே அவர்களை விடுத்து, நாகரிகம் வாய்ந்த ஏனை எல்லா மக்கட் பகுப்பினரையும் இம் மூவகையில் வைத்து ஆராய்ந் தறிதலே எம்மனோராற் செயற்பாலதாகும்.

இனி, நாகரிகம் வாய்ந்தாருள்ளும், பண்டைக் காலத்தில் மட்டும் நாகரிக வாழ்விற் சிறந்திருந்து பின்றைக் காலத்தில் இல்லையாயினாரும், பண்டைக்காலத்தே நாகரிகம் இல்லாதிருந்து பின்றைக் காலத்தே அதில் ஓங்கிவருவாரும், பண்டைக்காலம் முதல் இன்றுகாறும் நாகரிக வாழ்க்கையிற் பிறழாமல் வருவாரும் என மூன்று பகுப்பினர் உளர். இற்றைக்குப் பதினாயிர ஆண்டு களுக்கு முன்னமே நாகரிகத்திற் சிறந்து விளங்கி இப்போது இல்லையாய் மறைந்தவர்கள்: நம் இந்திய நாட்டுக்குப் புறம்பே மேல் நாடுகளிலிருந்த எகுபதியர், சாலடியர், பாபிலோனியர், அசீரியர், எபிரேயர் முதலியோராவர்; இற்றைக்கு மூவாயிர

1. தமிழரின் பழமையும் புதுமையும் குறித்து அடிகளார் எழுதத் துவங்கி முற்றுப்பெறாமல் இருந்த இக் கட்டுரை ஈண்டு இருந்தபடியே வெளியிடப் பெறுகிறது.

ஆண்டுகளுக்கு முன் அம் மேல் நாடுகளில் அங்ஙனமே நாகரிகத்தில் மிக்கு விளங்கிய கிரேக்கரும், உரோமரும் இப்போது இல்லையாயினர். இனி நம் இந்திய நாட்டுக்குப் புறம்பே கீழ்நாடுகளில் ஏழாயிர ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகத்தில் முதன்மை பெற்று நின்ற பெருவியர், மெக்சிக்கர் என்பாரும் இப்போதில்லாதொழிந்தனர். இவ்வாறு இந்திய நாட்டுக்கு வெளியே யிருந்த பழைய நாகரிக மக்களின் நிலை இப்போது இல்லையாய் ஒழிய, இவ்விந்திய நாட்டினுள்ளே வடமேற்கே பண்டொருகால் நாகரிகம் வாய்ந்தாராயிருந்த ஆரிய மக்களும் இஞ்ஞான்றில்லையாயினர். நம் இந்திய மக்களில் இந்து சமயத்தைத் தழுவி யொழுகுவார் பலருந் தம்மை 'ஆரியர்' எனச் சொல்லிக்கொண்டு வருகின்றனரேனும், பல் பெரும் பிரிவினராயிருக்கும் நம் இந்து மக்களின் ஒற்றுமை வேற்றுமைகளை 'உடம்பு நூல்' ஆராய்ச்சி முறைகளால் ஆழ்ந்தாராய்ந்து தெளிந்த ரிஸ்லிதுரை முதலான மேல் நாட்டாசிரியர்கள், இந்தியாவின் வடமேற்கிலுள்ள சில வகுப்பினர் தவிர, இந்திய நாடெங்குமுள்ள மற்றைப் பெரும்பாலார் தமிழரினத்தைச் சேர்ந்தவராகவே காணப்படுகின்றனரென்று முடிபுகட்டிச் சொல்லியிருக்கின்றார்கள். நம் இந்து மக்களுள்ளேயே ஒரு சாரார் இங்ஙனம் ஒரு முடிபு சொல்வாராயின், தம் இனத்தவரை உயர்த்துதற்பொருட்டு அவரங்ஙனங் கூறினார் போலும் என நாம் ஐயுறவு கொள்ளலாம். ஆனால் நம் இனத்தவரல்லாத ஐரோப்பிய ஆசிரியர்கள் ஆராய்ச்சி முறையில் நடுவு நின்று உண்மையை உள்ளபடி ஆராய்ந்து உரைப்பர்களாயின், அவர் சொற்களை நம் ஐயுறுதல் முறையாகாது. ஆகவே, உண்மை ஆரியர் என்பார் இக்காலத்தில் இந்நாடுகளில் இலரென்பதும், இப்போது இந்தியா எங்கும் உள்ளோரிற் பெரும்பாலார் பழைய தமிழ் நன்மக்களின் கால்வழியில் வந்தவரே யாவரென்பதுந் திண்ணம்.

இனிப், பண்டைக்காலத்தில் நாகரிகம் இன்றி வேட்டுவ வாழ்க்கையிலிருந்து பிறகு பையப்பைய நாகரிகத்தில் மேலேறி இப்போது அதன் உச்சிக்கண்ணே சுடர்விரிந்து விளங்குவோர் வெள்ளைக்கார நன்மக்களே யாவர்.

மேற்காட்டிய இருதிறத்தாரின் நிலை அவ்வாறிருப்பப், பண்டைக்காலந்தொட்டு இன்றைக் காலம் வரையில் நாகரிக வாழ்க்கையில் நிலைபெற்றவராய் வருபவர் தமிழருஞ் சீனர்களுமே யாவர். பழைய நாளில் தமிழருஞ் சீனரும் ஓரினத்தைச் சார்ந்தவரே என்பதனை விளக்குதற்கு உரிய அடையாளங்கள் பல இருக்கின்றன; ஆயினும், அவ்வடையாளங்களை இப்போது எடுத்துக் கூறுதல் வேண்டற்பாலதன்று. இனித், தமிழருள்ளும்

இத் தென்னாட்டை விட்டகன்று வடக்கே சென்றவர்கள் தெலுங்கராயும், கன்னடியராயும், மலையாளத்தராயும், துளுவ ராயுந், தோடராயும், மகாராட்டிரராயும், இராசபுத்திரராயும், பிராகுவியராயும், மகதராயும், வில்லராயும் மாறிவேறு வேறினத் தவர்போல் இஞ்ஞான்று உயிர்வாழ்தலானும், அவருடைய மொழிகளில் எழுதப்பட்டிருக்கும் நூல்களும் மிகப் பழைய காலத்தனவன்றி இற்றைக்கு ஐந்நூறு அறுநூறு ஆண்டுகளுக் குள் இயற்றப்பட்டனவாய்ப் பெரும்பாலும் ஆரியமொழி வழக் கையும் ஆரியர் வழிவந்த ஒழுகலாறுகளையுமே முற்றுந் தழுவின வாய் இருத்தலானும் பழந்தமிழ் இனத்தைச் சேர்ந்த இவர்களை யும் இவர்களின் மொழிகளையும் அம் மொழியிலெழுதப்பட்ட நூல்களையும் ஆரிய முறையிற் சேர்த்துவிடுதலே நன்று. போக, எஞ்சியுள்ள தனித்தமிழ் மக்கள்மட்டுமே பல்லாயிர ஆண்டு களுக்கு முன்னைதொட்டு இன்றுகாறும் தமக்குரிய பழக்க வழக்கங்களில் முற்றும் மாறிவிடாமல் நாகரிக வாழ்க்கையிற் பதிந்து நிற்கின்றார்கள்; இத் தமிழ்மக்கள் வழங்குந் தமிழ் மொழியுந் தனக்குரிய பண்டைச் சிறப்பில் முற்றுங் குறைவு படாதாய்த், தன்னையொத்த பழமையுடைய எகுபதியம், சாலடியம், எபிரேயம், ஆரியம், கிரேக்கம், இலத்தீன் முதலான மொழிகளெல்லாம் இறந்துபடவுந் தான் இறந்துபடாதாய்ப் பல கோடி மக்கள் ஒருவரோடொருவர் அளவளாவி வாழ்தற்குக் கருவியாய் உதவி செய்து வருகின்றது. காலஞ்செல்லச் செல்ல மக்களுடம்பும் பிறவுயிர்களின் உடம்பும் மாறிவருதல் போல, மக்களின் நினைவுகளுக்கு உடம்புபோல் உறைவிடமாயிருந்து பயன்றந்துவரும் மொழிகளும், அம் மொழிகளை வழங்கும் மக்களும் மாறிவருதல் இயற்கையேயாம்............

---

## திருக்குறள்

[நாஞ்சில், கா. கணபதி]

திருக்குற ளென்னும் செந்தமிழ் நூலைத்
தெளிவுறக் கற்றுளர் நாளும்
செருக்கற வாழ்மின் செந்தமி ழன்னை
சீர்மிகப் பேறுகள் தருவள்
வெருக்கொளும் வாழ்வில் வீரமும் தெளிவும்
வேண்டிய வேண்டிய தருவள்
திருக்குற ளென்னும் தெய்வநூல் வழியே
தேயமும் செல்லுதல் நன்றே!

---

# சேக்கிழார் புராணநடை

[திரு. ச. கணபதி முதலியார், எம். ஏ., எல். டி.]

(செல்வி, சிலம்பு - ௩௨, பரல் - ௩, ௧௯௨-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானியாரும் குலச்சிறையாரும் ஆலவாய் அரன் அடி போற்றும் மெய்யன்பர்கள். 'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைமட மானி' என்ற மதுரை முதல் திருப்பதிகத்தில் ௧, ௩, ௫, ௭, ௯ என்ற தேவாரப் பாடல்களில் அம்மையாரின் பணியைப் போற்றியும்; ௨, ௪, ௬, ௮, ௧0 என்ற பாடல்களில் குலச்சிறையாரின் பணிகளைப் பாராட்டியும்; ௧௧-வது பாடலில் இருவரது பணிகளை ஏற்றியும் ஞானசம்பந்தரே பாடியுள்ளார். எனவே அவர்களது சிவவொழுக்கத்திற்கு ஏதம் இழைத்தல் தகாது. இச் சீரிய கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கித்தான் சேக்கிழார்,

"பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையா ரன்பி னாலு
மரசன்பா லபராத முறுத லாலும்
மீண்டு சிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னாத லாலுந்
தீப்பிணியைப் 'பையவே செல்க' என்றார்"

என்று சொற்பெருக்கஞ் செய்வாராயினர்.

சுரவாதத்தில் தோற்ற அமணர் கனல்வாதத்திலும் தோற்றனர். பின்னர் முக்காலில் ஒருக்கால் வெற்றிபெறுவோம் என்று அரசனிடம் வாதாடி புனல்வாதத்தில் இறங்கினர். அதிலும் இறுதியில் உறுதியாய்த் தோற்றுக் கழுக்கையர் கழுவேறினர். சம்பந்தர் புனல்வாதத்தில் வெற்றிபெற,

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய(து)எல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

என்ற திருப்பாசுரத் திருப்பதிகத்தைப் பாடி, இறைவன் இவன் எனச் சுட்டிக்காட்டிய விரல்கொண்ட திருக்கையால் புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடியாம் வையை நதியில் ஏட்டை

யிட்டார். அவ் வேடு எதிரேறிச் சென்றது. அதன்கணுள்ள தேவாரப்பதிகம் தமிழ் உயிர்எழுத்துக்கள் பன்னிரண்டு என்பன போல், சிவஞானபோதச் சூத்திரங்கள் பன்னிரண்டு என்பன போல், சைவத் திருமுறை பன்னிரண்டு என்பனபோல், வானுலாவும் சூரியர் பன்னிரண்டு என்பனபோல் பன்னிரண்டு பாசுரங்களைக் கொண்டிலங்குவது. அப் பாசுரங்களுக்குச் சேக்கிழார் பல பாடல்களில் விரிவுரை கூறியுள்ளார். அப் பதிகத்தின் முதல் பாட்டு முத்துப்பாட்டு; சைவர்களின் சிந்தையை நனி கொள்ளைகொள்ளும் தன்மையது. அத் திருப் பாட்டில் ஆறு ககரவீற்று வியங்கோள் வினைமுற்றுக்கள் உள்ளன. அவற்றுள் வாழ்க, வீழ்க, ஆழ்க, சூழ்க என்பன அச் செய்யுளில் எதுகைச் சொற்களாக நிற்பன. ஓங்குக, தீர்க என்பன ஈற்றடிச் சொற்களாக நிற்பன அந்தணர் வாழ்தல் வேண்டும், வானவர் (தேவர்கள்) வாழ்தல்வேண்டும், ஆனினம் (பசுக்கூட்டங்கள்) வாழ்தல்வேண்டும் என்பது முதலடியிற் போந்த பொருள். அருமறை அந்தணர்கள் வேள்விக்குரியோர்; அறவேள்வி ஓம்புநர் அவர்களே. எனவே அவர்கள் நல்வாழ்வை முதற்கண் வேண்டினர். அவர்கள் செய்யும் வேள்விப்பயனை ஏற்றுக்கொண்டு அருள்புரியத் தேவர்கள் இன்றியமையாத வர்கள் ஆதலின் அடுத்து அவர்கள் வாழ்வையும் வேண்டினர். ஆனினம் வேள்வி செய்வார்க்கு உறுபொருள்களாகிய பால், தயிர், நெய் முதலிய ஐந்து திரவியங்களைக் கொடுக்கவேண்டு தலின் அவைகளது வாழ்வையும் விரும்பினர். அங்ஙனம் பஞ்ச கௌவியத்தைத் தரும் ஆனிரைகள் சிறப்புற்று வாழ்ந்திருக்கப் புல், பூண்டுகள் இன்றியமையாதன. அப் புற்பூண்டுகளின் விளைவிற்கு மழை எஞ்ஞான்றும் வேண்டற்பாலது. ஆதலின் 'வீழ்க தண்புனல்' என மழையை வேண்டினர். என்னை?

> " விசும்பிற் றுளிவீழி னல்லால்மற் றாங்கே
> பசும்புற் றலைகாண் பரிது."

என்பது மறைமொழி ஆகலின் என்க.

> " மாதவர் நோன்பு மடவார் கற்புங்
> காவலன் காவ லின்றெனி னின்றால்."

என்பது சாத்தனர் கண்ட அனுபவமொழி. மாரி வறங்கூறின் அறங்கூறும் வையம் அரசனைப் பழிக்கும். அந்தணர் வேள்விக் கும் பொற்புடை மாதரார் கற்பிற்கும், விண்ணின்றிழியும் பருவ மழைக்கும் ஆனிரைப் பெருக்கிற்கும் அரசனது செங்கோலே காரணமாதலின் 'வேந்தனும் ஓங்குக' என்றார். இங்ஙனம் கூறிய சம்பந்தர் வாய்ச்சொல் தெய்வச்சொல்லாதலின் கூன்

பாண்டியனது உடற்கூனும் மனக்கூனும் நீங்கப்பெற்று அவன் நின்றசீர்நெடுமாறன் ஆயினன். பிற சமயங்கள் வலியிழந்து ஒழிக என்பார் 'ஆழ்க தீயது' என்றார். உயிர்கள் யாவும் அரன் அஞ்செழுத்தை நெஞ்சமுழுத்திச் செழிக்க என்பார் 'அர னாமமே சூழ்க' என்றார். செம்பிற் களிம்புபோல் பிறப்புகடோறும் பிணித்துநிற்கும் மலத்துன்பங்கள் நீங்குக என்பார் 'வையக முந்துயர் தீர்கவே' என்றார். மேலைத் திருப்பாசுர முதற்பாட்டு இத்துணைக் கருத்துக்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளன என்பதைப் பின்வரூஉம் பெரியபுராணச் செய்யுள்களால் செவ்விதின் அறிக.

"அந்தணர் தேவரா னினங்கள் வாழ்கவென்
றிந்தமெய்ம் மொழிப்பய னுலக மின்புறச்
சந்தவேள் விகள்முதற் சங்க ரர்க்குமுன்
வந்தவர்ச் சனைவழி பாடு மன்னவாம்.

வேள்வி நற்பயன் வீழ்புன லாவது
நாளு மர்ச்சனை நல்லுறுப் பாதலால்
ஆளு மன்னனை வாழ்த்திய தர்ச்சனை
மூளு மற்றிவை காக்கு முறைமையால்.

ஆழ்க தீயதென் றோதிற் றயனெறி
வீழ்க வென்றவே றெல்லா மரன்பெயர்
சூழ்க வென்றது தொல்லுயிர் யாவையும்
வாழி அஞ்செழுத் தோதி வளர்கவே.

சொன்ன வையக முந்துயர் தீர்கவே
என்னு நீர்மை இகபரத் திற்றுயர்
மன்னி வாழுல கத்தவர் மாற்றிட
முன்னர் ஞானசம் பந்தர் மொழிந்தனர்."

நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் திருவீழிமிழலையில் பெருமானாரை வழிபட்டிருக்குங்கால் மாரிவளஞ் சுருங்க அடியார்களெல்லாம் வற்கடத்தால் பீடிக்கப்பட்டனர். மிழலைப் பிரானரும் புகலி ஆண்டகையார்க்கும் திருமுனைப்பாடி நாட்டவர்க்கும் கிழக்கு மேற்குப் பீடங்களில் படிக்காசு வைத்தருளினார். படிக்காசு துணைகொண்டு சிவஞானக் கன்றும் திருவேடத்தரசும் சொல்லால் சாற்றி அடியவர்கட்குத் திருவமுதிட்டருளினார்கள். ஆனால் நாவுக்கரையர் திருமடத்தில் விரைவில் அமுது வழங்கப்பட்டது; சம்பந்தர் மடத்தில் அமுது சிறிது காலந் தாழ்த்தே வழங்கப்பட்டது. சம்பந்தர் தான் பெற்ற காசு வாசியுள்ள காசாதலின் அங்ஙனே காலம் நீடித்தது என்பதை அறிந்து,

“ வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏச லில்லையே.”

எனத் திருப்பதிகம் பாடி முறையிட்டுப் பின் நற்காசு பெற்றார். இருவர்க்கும் காசு நல்கிய இறைவனார் ஒருவர்க்கு வாசியிலாக் காசும் மற்றொருவர்க்கு வாசியுடைக்காசும் அளிக்கக் காரணம் யாது என்ற வினா எழுமன்றே! இவ் வினாவைச் சேக்கிழாரே எழுப்பி அதற்குத் தக்க விடையும் பகர்கின்றார். ஆளுடையபிள்ளையார் ஈசனின் சொந்தப்பிள்ளையார்; தன் திருமகனார். ஆளுடைய அரசர் உழவாரப் படையாளி; தமக்குக் கைத்தொண்டு செய்யும் திருத்தொண்டர், பேறுடையார். உரிமைபற்றி மகனார்க்குக் குறைசெய்யினும் உலகியல்பற்றி மகனார் ஏற்றுக்கொள்வரே யன்றித் தந்தையைக் குறைகூறுபவரிலர். பாவரசாய நாவரசு திருத்தொண்டின்வழி நின்ற சீரடியார். அடியார்க்கு உற்றுழி உதவிக் குறைதீர்ப்பதே ஆண்டான் அடிமைத்திறம். ஆகலின் அவர்க்கு வாசியிலாக் காசு நல்கி மெய்த்தொண்டின் மேன்மையை உலகிற்குப்புலப்படுத்தினார் என்பது சேக்கிழாரின் அருள் விளக்கம். சேக்கிழாரது பாட்டை அடியில் தருதும்; படித்தின் புறுமின்.

“ ஈசர் மிழலை இறையவர்பால் இமையப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம் திருமா மகனார் ஆதலினால்
காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகும் படிமையினால்
வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்.”

(திருநாவுக்கரசர் புராணம் - செ. உசுo.)

திருமறைக்காட்டில் வேதங்கள் வழிபட்டுத் தாழிட்ட திருக்கதவங்களைத் திறந்து நேர்முகமாக மறைக்காட்டு மாமணியை இறைஞ்ச விழைந்தனர் அருட்கடலும் அன்புக்கடலுமாகிய சம்பந்தரும் சொல்வேந்தரும். அப்பரைக் கதவங்கள் திறக்கப் பாட வேண்டினர் சண்பைப்பிள்ளையார். “பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ” என்றெடுத்துப் பாடினார் திருநாவுக்கரசர். அவர் பத்துப்பாட்டுகள் பாடியும் கதவங்கள் திறக்கப்படவில்லை.

“ அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே.”

என்று காரணங்காட்டிப் பாடியஞான்று திருக்கதவங்கள் திறந்தன. சிவனார் மனங்குளிர அஞ்செழுத்தோதித் திருத்தொண்டில் உறைப்புக்கொண்ட அப்பர் பத்துப்பாட்டுப் பாடியும் திறவாது காலந்தாழ்த்துத் திருக்கடைக்காப்பிலே அருள் சுரந்ததற்கும் காரணம் உண்டுகொல் என்று ஐயுறுவார்க்குப் பொருள் விரித்துத் தெளிவுபடுத்துபவராய்,

" உண்ணீர் மையினால் பிள்ளையார்
உரைசெய் தருள அதனாலே
'பண்ணின் நேரு மொழியாள்' என்
றெடுத்துப் பாடப் பயன்துய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு
நீக்கத் தாழ்க்கத் திருக்கடைக்காப்
பெண்ணீர் 'இரக்கம் ஒன்றில்லீர்'
என்று பாடி இறைஞ்சுதலும்."
(திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் - செ. உகூஅ.)

என்று பாட்டிசைத்தார் சேக்கிழார் பெருமான். நாவுக்கரசரின் தேனூறு தீந்தமிழின் சொல்நயத்தையும் பொருள்நயத்தையும் முற்றிலும் நுகர்தல் வேண்டுமெனும் பெருவேட்கையால்தான் பத்துப்பாட்டு முற்றினும் கதவங்களைத் திறக்கச்செய்திலர் இறைவர் என்பதே இதன்சார்பில் எழுந்த வினாவிற்கேற்ற விடை.

பதார்த்தம் பாராது பதமே பார்த்திருக்கும் மெய்ஞ்ஞானிகளின் வரலாறுகளைக் கூறவந்த சேக்கிழார் புராணத்திற்குப் பொருள் சேர்க்கும் நெறியில் ஞானசம்பந்தர் தேவாரத்தில் அவர் புனைந்தருளிய புதிய யாப்பு அமைதிகளையும் முறையே சுட்டிச் செல்வாராயினர். சம்பந்தர் பல விகற்பச்செய்யுள்களைப் பாடியுள்ளார். விகற்பம் எனின் வேறுபாடு எனப் பொருள்படும். சொல்லும் சந்தமும் விரவிப் பற்பல ஓசை மாறுபாடுகள்படப் பாடப்படுவன விகற்பச்செய்யுட்கள். அவை சொல்லணியில் மிறைக்கவியின்பாற் படுமென்பர். சீகாழிப்பிரான்மேல் மொழிமாற்று, மாலைமாற்று, சக்கரமாற்று, திருமுக்கால், வழிமொழி, இயமகம், ஏகபாதம், இருக்குக்குறள், ஈரடி, ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல் வைப்பு, எழுகூற்றிருக்கை, கூடற்சதுக்கம் முதலியன பாடினார். இவைகட்கு முன்னர் இலக்கியம் இன்றாகலானும், தாம் பாடிய இச் செய்யுட்களுக்கு இலக்கணமும் இலக்கியமும் அவையே தானேயாய் அமைதலானும் சேக்கிழார் 'மூல இலக்கியம்' பாடினார் என்று குறிப்பிட்டார்.

" செந்தமிழ்மா லைவிகற்பச் செய்யுட்களான் மொழிமாற்று
வந்தசொற்சீர் மாலைமாற்று வழிமொழியெல் லாமடக்குச்
சந்தவியமக மேகபாதந் தமிழிருக்குக் குறள்சாத்தி
எந்தைக்கெழு கூற்றிருக்கை யீரடியீ ரடிவைப்பு
நாலடிமேல் வைப்புமேன்மை நடையின்முடு கும்ராகஞ்
சால்பினிற்சக் கரமாதி விகற்பங்கள்சாற் றும்பதிகம்
மூலவிலக் கியமாக வெல்லாப்பொருள் களுமுற்ற
ஞாலத்துயர் காழியாரைப் பாடினார்ஞான சம்பந்தர்."

என்ற இவ் விருபாடல்களில் ஞானத்தமிழ் எல்லாம் அடங்குமாறு காண்க.

"காட தணிகலங் காரர வம்பதி காலதனிற்
றோட தணிகுவர் சுந்தரக் காதினிற் றூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம்வில் லுங்கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம புரத்தரரே."

என்பது திருமொழி மாற்று. (காடது பதி; காரரவம் அணிகலம்; காதினில் தோடு; காலதனிற் றூச்சிலம்பர்; வேடது உருவம்; விசயற்கு வில்லுங் கொடுப்பர் என்றிவ்வாறு மொழிகளை மாற்றிக் கூட்டிப் பொருள்கொள்ள வைத்த விகற்பச் செய்யுள் எனும் மிறைக்கவி.)

"யாமா மாநீ யாமாமா யாழீ காமா காணுகா
காணு காமா காழீயா மாமா யாநீ மாமாயா."

என்பது திருமாலை மாற்று. மாலை - வரிசை; மாற்று - மாறுதலுடையது. திருமாலைமாற்றென்பது பாட்டினை முன்னிருந்து பின்படிப்பினும், மாற்றிப் பின்னிருந்து முன்படிப்பினும் ஒன்று போல் வருவது.

"ஒருசெய்யுள் முதலீ றுரைக்கினு மஃதாய்
வருவதை மாலை மாற்றென மொழிப."

என்பது மாறனலங்காரம்.

"விளங்கியசீர் பிரமனூர் வேணுபுரம்
புகலிவெங் குருமேற் சோலை
வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய்
சிரபுரம்வண் புறவ மண்மேற்
களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங்
கொச்சைகழு மலமென் றின்ன
விளங்குமரன் தன்னைப்பெற் றிமையவர்தம்
பகையெறிவித் திறைவ னூரே."

என்பது திருச்சக்கரமாற்று. சக்கரவடிவாக அடைத்துச் சுழன்று வருவதுபோலச் சீகாழியின் பன்னிரண்டு பெயர்களும் மாறிச் சுழன்றுவரப் பாடியருளிய சித்திரகவியே திருச்சக்கரமாற்றெனப்படும். பாண்டியன் திருமுன்னர் 'பிரமனூர்' என்று தொடங்கும் மற்றொரு சக்கரமாற்றுப் பதிகமும் உண்டு. அதனை முன்னர்க் கூறினோம்.

"பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்."

என்பது திருஏகபாதம். ஓர் அடிபோலவே எல்லா அடிகளும் வருதலால் இஃது அப் பெயர்த்தாயிற்று. இப் பதிகத்திற்குக் கண்ணுடைய வள்ளலார் உரைவகுத்துள்ளார்கள்.

"ஓருரு வாயினை" என்று தொடங்குவது திருவெழு கூற்றிருக்கை. இஃது ஒன்றுமுதல் ஏழுவரை ஏறியும் இறங்கியும் எண்ணலங்காரம்படப் பாடப்படும் ஒருவகைப் பாட்டு. சம்பந்தரின்இப் புத்திலக்கணச் செய்யுட்களை நம்பியாண்டார் நம்பிகளும் 'ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை'யில்,

> "......... ......... ......... எப்பொழுது
> நீக்கரிய வின்பத் திராகமிருக் குக்குற
> ளேக்கரிய பாசுரம்பல் பத்தோடு—மாக்கரிய
> யாழ்முரி சக்கரமாற் றீரடி முக்காலும்
> பாழிமையாற் பாரகத்தோர் தாமுய்ய—வூழி
> யுரைப்பமரும் பல்புகழா லோங்கவுமை கோனைத்
> திருப்பதிகம் பாடவல்ல சேயை."

என்று பாராட்டியுள்ளார்.

> "இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்."

என்பது தொல்காப்பியம். இத் தொல்காப்பிய அடி ஒரு நூற்கு, சொல்லழகு, கருத்தழகு என்ற இரண்டும் இன்றியமையாது வேண்டற்பாலது என்பதனை நனிவலியுறுத்தும். நூல்யாக்கும் புலவன் முதற்கண் 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே' என்பதற்கிணங்க விழுமிய கருத்துக்களைக் (Ennobling sentiments and elevating thoughts) குறிக்கோளாகக் கொண்டு நூலை இயற்றுதல் வேண்டும். பின்னர் அச் சீரிய விழுமிய கருத்துக்களைப் படிப்போர் உளங்கொளுமாறு நன் மொழி புணர்த்தி, சொல்லும் பொருளும் பருந்தும் நிழலும் போலச் செல்லுமாறு சொன்னடை தெரிந்து செய்யுள்களை யாத்தல் வேண்டும். சேக்கிழாரது பெரியபுராணத்தில் இதுகாறும் அதன் பொருள் போக்கு நிலையையும் நடையையும் ஒருவாறு கூறினோம். இனி அதன்கண் சொற்போக்கு நெறியையும் நடையையும் காண்பாம்.

பவணந்தியாரின் பத்தழகில் நூற்கு முதலாக அமைய வேண்டியது சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற அழகாம். சொற்கள் ஆழமுடைத்தாய், அகலமுடைத்தாய், ஆற்றலுடைத் தாய், நவில்தொறும் இன்னோசை நல்குவதாய், பயில்தொறும் பலபொருள் பயப்பதாய் அமைதல்வேண்டும். அன்றியும் அச் சொற்கள் சொல்ல நினைந்த கருத்துக்களைச் செவ்விதாகப் புலப் படுத்தும் ஆற்றல்பெற்றதாய் அமைதலும் வேண்டும். அச்

சொற்கள் சிலவேயாயினும் பலவகையான பொருள்களைப் பயந்து நிற்கவேண்டும். இதனைச் 'சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருள்' என நவில்வர் நன்னூலார். இச் சொல்லமைப்பு வகை அல்லது சொல்வைப்பு நெறிதான் நடை (Style) எனப்படும். இவைகளை நீள, ஆழ நினைந்து சேக்கிழாரின் முதற்செய்யுளாகிய,

"உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

என்ற இச் செய்யுளின் சொற்போக்கின் நெறியையும் சொற்செட்டு, பொருள் பெருக்க நிலையையும் ஆராய்வாம்.

'உலகு என்பது உயர்ந்தோர் மேற்றே' என்பதனானே அஃது ஆகுபெயராய்ச் சீவன்முத்தர்களைச் சுட்டிற்று. இறைவன் அச் சீவன்முத்தர்களாலும் உணர்தற்கும் அடைதற்கும் அரியவன் என்பது முதற்பொருள். உணர்தல் மக்கள் தொழில்; ஓதுதல் வாக்கின் தொழில். இறைவன் அகக்கரணங்களாலும் புறக்கரணங்களாலும் அறியக்கூடாதவன். அவன் மாற்ற மனங் கழிய நின்ற மறையோன்; சொற்பதங்கடந்த தொல்லோன்; உணர்ந்தார்க்கும் உணர்வரியோன். எனவே இறைவன் பசுக்களது பாச ஞானத்திற்கு எட்டாதவன். இம் முதலடி இறைவனது அருவத் திருமேனியைக் குறியாநிற்கும். அஃது அவனது சொரூப இலக்கணம். 'நிலவு உலாவிய நீர்மலி வேணியன்' என்ற இரண்டாமடி அவனது தடத்த இலக்கணத்தை, உருவத் திருமேனியைக் குறித்து நிற்கின்றது. நிலவையும் (சந்திரனையும்) நீரையும் (கங்கையையும்) சடையிற்கொண்டது இறைவனது அருட்டிறத்தை, கருணைவெள்ளத்தைக் காட்டுமென்பர். 'அலகில் சோதியன்' என்ற மூன்றுமடி அவனது அருவுருவத் திருமேனியைக் காட்டாநிற்கும். அருவம், உருவம், அருவுருவம், தாங்கிய இறைவனே அம்பலத்தாடும் கூத்தன் என்ற கருத்தை ஈற்றடி ஏற்று நிற்கின்றது. இறைவன் ஞான வொளியுடையவன். அவ் வொளி விளங்க இல்லக விளக்காகிய சுடர் விளங்கும்; பல்லக விளக்காகிய ஞாயிறு விளங்கும்; இந்திரிய அந்தக்கரண ஆன்மபோதமாகிய ஆன்மாவும் விளங்கும். மற்றும் அவ் வொளி தன்னொளி ஆற்றலால் பிற ஒளிகளையும் பரவச்செய்து சிவஞான ஒளியாய் நிற்கும் என்பதும் ஈண்டு குறிக்கற்பாற்று. இறைவனது வல்லமையை உணர்த்துஞ் சொல்லாகிய 'அரியவன்' முன்னே வல்லோசைகள் வந்ததூஉம் இக் காரணம்பற்றியேதான்.

(தொடரும்)

# மறைமலையடிகளார் நினைவு விழா

நாகை நகரில் நவம்பர் 3-ஆந் தேதி மறைமலையடிகளார் நினைவு விழா மிகச் சீருஞ் சிறப்புமுறக் கொண்டாடப்பட்டது. அன்று மாலை 6-15 மணிக்கு விழா நிகழ்ச்சிகள் துவங்கப்பட்டன. திரு. கோவிந்தராசு குழுவினர் தமிழ்ப் பாக்கள் மூலம் மறைமலையடிகள் புகழ் பாடினர். தமிழாசிரியர் திரு. கோவை இளஞ்சேரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

அடுத்து, தொடக்கவுரை ஆற்றிய திரு. எ. எம். பி. திருவம்பலம் செட்டியார் மறைமலையடிகளின் ஆராய்ச்சி நிறைந்த நூற்களை அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டும் எனவும், அவருக்கு நாகையில் நிலைத்த நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் எனவும் கூறினார்.

தலைமையுரை ஆற்றுகையில் திருப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளார், மறைமலையடிகள் தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை எனவும். அவர் அரிய ஆராய்ச்சி நூற்களை நமக்குத் தந்துள்ளார் எனவும். அவர்வழி நின்று நாம் அவர் கொள்கைகளை இல்லங்கள் தோறும், நாடு முழுதும் பரப்பவேண்டும் எனவும் கூறி மறைமலையடிகளின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார்கள்.

அடுத்து, திறப்புகழ் நூல் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. அத் தமிழ்நூலை அறிமுகப்படுத்தும் அடிகளார், "இந் நூல் மறைமலையடிகளின் மூதாதையராகிய நாகை அழகுமுத்துப் புலவரால் இயற்றப்பட்டது. நல்ல தமிழில் பல பாடல்கள் இந் நூலில் உள்ளன. இந் நூல் பல ஆண்டுகளாகக் கிடைக்கப் பெறுமல் இருந்தது. இது கருதியே இந் நூலை இலவசமாக வெளியிட முன்வந்த வணிகப் பெருமக்களாகிய நாகை நா. வீரப்ப செட்டி சன் அண்டு பிரதர் அவர்களைப் பாராட்டுகின்றேன். அவர்கள் தொண்டு சிறக்க வாழ்த்துகின்றேன்." எனக் கூறினார்.

அடுத்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் "சங்ககாலத் தமிழர் வாழ்வு" என்பது குறித்து சொறபெருக்காற்றினார். அதன் சுருக்கம் வருமாறு :

"சங்க காலத்தில் தமிழர்கள் மிகச் சிறந்த வாழ்வு வாழ்ந்தனர். காதல், வீரம் அன்பு, அறம் சிறந்திருந்தன. வந்தாரையெல்லாம் வாழவைத்தனர். யாதும் ஊரே யாவரும் கேளிர்

என வாழ்ந்தனர். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற திருமூலர் திருமந்திரத்திற் கேற்ப ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். அகநானூறும் புறநானூறும் காதலுக்கும் வீரத்துக்கும் எடுத்துக் காட்டுக்களாக இன்றும் திகழ்கின்றன. திருக்குறள் உலகத்திற்கே வழி காட்டி நூல்.

இடைக்காலத்தில் தமிழகத்தில் என்ன நடந்தது? வந்தாரை வாழ வைக்கும் நல்ல உள்ளம் கொண்ட தமிழன் ஏன் தாழ்ந்தான்? இதை நாம் ஊன்றிக் கவனிக்கவேண்டும். தமிழகம் ஏன் வீழ்ந்தது, எப்படி வீழ்ந்தது? அதைத்தான் நாம் ஆராயவேண்டும். வெளியிலிருந்து வந்தவர்களுக்கு ஆற்றங்கரை ஓரத்திலே தங்குவதற்கு நல்ல வசதியான இடத்தைத்தான் கொடுத்தார்கள் தமிழர்கள். ஆனால் வந்தவர்களுக்கு நல்ல உள்ளம் இல்லாமையால் தமிழர்களிடம் தகாத கொள்கைகளையும், சாதி மத பேதங்களையும் புகுத்திவிட்டனர். சாதி நம்மிடம் இருந்திருந்தால் அச் சொல்லும் தமிழில் இருந்திருக்கும். சங்க காலத்தில் இருந்த நான்கு பிரிவும் தொழிலின் அடிப்படையில் அமைந்தவை. உயர்வு தாழ்வு கிடையாது. ஒன்றே குலம் என்ற அடிப்படையில் தமிழர்கள் வாழ்ந்தார்கள்.

பறையர் என்றால் பறை அறிவிப்பவர்கள்—அரசர்களின் ஆணையை மக்களுக்கு அறிவிப்பவர்கள் எனப் பொருள்படும். வேளாளர்களே நாட்டின் உயிர் நாடி. படையை ஆட்சி—(நடத்திச் செல்பவர்கள்)—புரிபவர்கள் படையாட்சிகள்-நாயகர்கள் சேனைத் தலைவர்கள் என்று தொழிலின் அடிப்படையில் தான் பிரிவு உண்டு. இவர்களெல்லாம் இன்று தாழ்த்தப் பட்டவர்களாகவும் பிற்பட்டவர்களாகவும் ஆக்கப்பட்டு விட்டார்கள். இவ் வேற்றத்தாழ்வெல்லாம் ஒழிக்கப்பட்டுத் தமிழர்கள் அனைவரும் ஓர் இனமாக ஒன்றுபடவேண்டும். தலைமையாசிரியர் வேலை செய்பவரை ஹெட்மாஸ்டர் சாதி என்று நாம் அழைக்கின்றோம். அம் மாதிரி சாதி உண்டா? அதே போல் ஆர். ஐ.—ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்ற சாதி உண்டா? இம்மாதிரி சாதி எவ்வாறு கிடையாதோ அதேபோல்தான் அன்றும் சாதி கிடையாது

நமது மொழியில் வேண்டாத் தகாத வடமொழிச் சொற்கள் புகுத்தப்பட்டுள்ளன. தமிழில் தக்க சொற்கள் ஏராளமாக இருக்கும்போது பிறமொழிச் சொற்களைப் புகுத்துவது தகாது. வேண்டுமென்றே பிறமொழிச் சொற்களைச் சிலர் கையாளுகின்றனர். இது தவறு. இது அம் மொழிமீதும் அம் மொழியையே பயன்படுத்துவோர் மீதும் பெரும் காழ்ப்பைத்தான் ஏற்படுத்தும்; வேண்டாம் இந்தத் தவறான போக்கு என்று எச்

சரிக்கின்றேன். நாடு உள்ள நிலைமையில் அச் சிறு சமூகம் திருந்துவதே நன்று. தாய் மொழியைத் தமிழாகக் கொண்டு தமிழகச் சமுதாயத்துடன் ஒன்று கலந்து—சம உரிமையுடன்—உயர்வு தாழ்வின்றி வாழ்வதே சிறந்தது. சென்றதை மறந்து திருந்துவதே காழ்ப்பிற்கு இடந்தராததாகும்.

பல சங்ககால தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் அறியாமல் இன்று தமிழர் வாழ்வது வருந்தத்தக்கது. இன்று 'குடவோலை' என்றால் பெரும்பாலோர்க்குப் புரியவில்லை. சங்க காலத்தில் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டிற்கு அப் பெயர் வழங்கியது. 1957-இல் தேர்தல் நடைபெறுவது ஆச்சரியமல்ல. அன்றே நமது முன்னோர்கள் இம் முறையைக் கையாண்டனர்.

தனக்குப் பொருள் புரியவில்லை என்பதற்காகச் சங்க நூற்களை ஒரு மூட்டையாகக் கட்டி அதில் ஒரு கல்லையும் கட்டிக் கடலில் எறிந்துவிடவேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் ஒரு தமிழர் துணிந்து கூறினார்.

மற்றொருவர், சேரன் செங்குட்டுவன் இமயத்திற்குச் சென்றிருக்க முடியாது. திருப்பதிக்கு வேண்டுமானால் சென்றிருக்கலாம். நமது மாணவர்கள் திருப்பதி பழனி போன்ற மலைப் பிரதேசங்களுக்குச் சென்றால் கரியாலும் சுண்ணும்பினாலும் தங்கள் பெயர்களை எழுதி வருவதுபோலச் சேரன் செங்குட்டுவனும் எழுதி வந்திருப்பான். இதைப்போய்ப் பிரமாதப் படுத்தி இமயம் சென்றதாகப் புகழ்கின்றார்கள் என்று வேலூரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் எந்தவித ஆதாரத்தையும் காட்டாமல் ஆராயாமல் கூறினார். இத்தகைய தமிழ்த் துரோகிகளைத் தமிழ்த்தாய் அதிக நாள் விட்டுவைத்ததில்லை. தமிழ்நாடு விழிப்புற ஆரம்பித்துவிட்டது.

சென்னையிலிருந்து நான் மதுரை தியாகராசர் கல்லூரியில் பணியாற்ற வந்தேன். என்னிடம் 600-க்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஒரு நாள் மதுரை மீனாட்சி கோவிலில் உள்ள ஓவியங்களைப் பார்த்து வருவோம் என்று எல்லா மாணவர்களையும் சனிக்கிழமை மாலை கோவிலுக்கு வரும்படி கூறினேன். நான் அங்குச் சென்றேன். மாணவர்கள் யாரும் அங்கு வரவில்லை. அடுத்த வாரமும் அதே போன்று கூறினேன். மீண்டும் மாணவர்கள் வரவில்லை. திங்கட்கிழமை கல்லூரி ஆரம்பமானவுடன் நானே மாணவர்களை இதுபற்றிக் கேட்டேன். அவர்களில் துணிவுள்ள ஒரு மாணவன் எனக்குப் பதில் கேள்வி போட்டான். "மீனாட்சி கோவிலைக் கட்டியவர்கள் யார்?" பாண்டியர்கள் (தமிழர்கள்)—என்றேன். மீண்டும் யாருடைய

பொருளால் கட்டப்பட்டது? தமிழ் மக்கள் தந்த வரிப் பணத்தி லிருந்து கட்டப்பட்டது என்றேன். 'தமிழர்களால் கட்டப்பட்ட தமிழர்களின் வரிப் பணத்தால் கட்டப்பட்ட மீனாட்சி கோவிலில் தமிழ் மூலம் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவா? தமிழ் மரபு அனுசரிக்கப்படுகின்றதா?' என்றான். இல்லை என்றேன். ஆகை யால் தான் நாங்கள் வர இயலவில்லை, என்று அம் மாணவன் கூறினான். சரி என்றேன். எனவே இதிலிருந்து நாடு முன் னேறிச் செல்கின்றது என்பதை உணர்ந்து அனைவரும் ஒற்றுமை பெற்று உயர்வு தாழ்வை மறந்து ஓர் ஒப்பற்ற தமிழ்ச் சமு தாயத்தை அமைப்போமாக."

முடிவுரையில் திரு. குன்றக்குடி அடிகளார் கூறியதாவது:

"டாக்டர் அவர்களின் சொற்பொழிவில் ஆலயத்தில் தமிழ் இன்னும் ஆட்சி புரியாதது குறித்து வருந்திக் கூறினார்கள். தமிழ்நாட்டில் எதற்கும் இயக்கம் நடத்தினால்தான் பயன் ஏற்படும் போலும். தமிழ்நாட்டிற்குப் பெயர் வைக்க—தமிழை ஆட்சி மொழியாக்க எதற்கும் இயக்கம் தேவைப் படுகின்றன. அதே போன்று ஆலயத்தில் தமிழில் பூசை நடக்கவேண்டும் என்ற கொள்கை வெற்றி பெறவும் இயக்கம் நடத்தித்தான் ஆகவேண்டும் என்றுதான் கருதுகிறேன். அரசியலாரே அறநிலையப் பாதுகாப்புத் துறை மூலம் இக் கொள்கையை நடை முறைப்படுத்த இயலும் நான் மக்களிடம் இக் கருத்தை நன்கு பிரசாரம் செய்துவிட்டுப் பின்னும் அரசியலார் கவனிக்காவிடில் போராட்டம் ஆரம்பிக்கலாம் என்று கருதியுள்ளேன். தாய் மொழியாகிய தமிழிலன்றி வேறெம்மொழியில் கடவுளிடம் நெக்குருகி நமது எண்ணத்தை வெளியிட முடியும்? தமிழர் களின் விருப்பம் விரைவில் நிறைவேறும் என நம்புகின்றேன். இவ் விழாவில் வெளியிடப்பட்ட திறப்புகழ் நூலில் ஓர் செய்யுளில் "மறுப்பாடிலாக் குறள் சொல்லிய வகை கண்டுமே —வன்மத்தினால் வெறுப்பார்களுக் கென்னோ பலன்" என்று திருக்குறளினையும் நாகை அழகுமுத்துப் புலவர் மிகவும் புகழ்ந்து பெருமைப்படுத்தியுள்ளார்கள். குறள் கூறும் அறவழி நின்று வாழ்வாங்கு இவ்வுலகிலே வாழ்ந்து நலம் பெறுவோமாக".

தமிழாசிரியர் திரு. கோவை - இளஞ்சேரன் நன்றியுரை கூறினார். விழா வெற்றியுடன் நடைபெற வாழ்த்தித் திருவாளர் கள் கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் மு. வரதராசன், டாக்டர் சி. இராசகோபாலாச்சாரி, வ. சுப்பையா பிள்ளை முதலியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி இருந்தனர்.

# தமிழ்த்தாயின் தவப்புதல்வர்[1]

[பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ.]

ஆட்சி மொழியாயிருந்த தமிழ் ஆங்கிலத்தால் அடிமை மொழியாக்கப்பட்டது; இசைத்துறையில் இணையற்று விளங்கிய இன்பத்தமிழ் மொழியைத் தெலுங்குமொழி ஒரு மூலையில் ஒதுக்கிவிட்டது. கடவுளரும் காதல் கொண்ட கன்னித் தமிழ் திருக்கோயில்களிலே தீண்டாதார் மொழியாகத் தேய்ந்து விட்டது. பட்டம் பதவி பெற்று வாழ்ந்த தமிழர்களுடைய வீடுகளிலே தமிழ்மொழியைப் பேசுவது மானக்குறைவான செயலாகக் கருதப்பட்டது. தம்முடைய தாய்மொழியாந் தமிழ் மொழியின் இந்த இழிவைக்கண்டு நொந்த புலவர்கள் சிலர் தமிழுக்கு உரிய மதிப்பைக் கொடுங்கள் என்று கூறக்கூடப் பயந்து வாழ்ந்தனர். இந்த நிலைமையை மாற்றித் தமிழைத் தலைநிமிர்ந்து வாழச் செய்வதற்கு மாபெரும் புரட்சி வீரர் ஒருவர் தோன்றினர். அவர்தான் மறைமலை அடிகளார்.

"வடமொழியிலிருந்தே தமிழ் தோன்றியது. வடமொழிச் சொற்களின்றித் தமிழ்மொழி வாழாது. வடமொழிச் சொற்களை அளவின்றிக் கலந்து எழுதுவதே தமிழ்ப் புலமையின் மாண்பு. மணிப்பிரவாள நடைதான் இனி நிலைக்க வேண்டும்" என்ற கருத்துக்கள் தமிழ் நாட்டிலாட்சி புரிந்த காலத்திலே—தமிழ்த்தாய் தன் சிறப்பியல்பு இழந்து நலிந்து ஒடுங்கும் நிலையில்—தமிழின் தனிப் பெருமையை நிலைநாட்டத் தோன்றிய தவப் பெருமகனாரே மறைமலை அடிகளார்.

### பெயர் மாற்றம்

தமிழுடன் ஆங்கிலம் ஆரியம் எனும் மொழிகளையுங் கற்றுப் பெரும் புலமை பெற்ற அடிகளார் உள்ளம் தமிழ் மொழியின் தாழ்வைக் கண்டு கொதித்தது. 'மறைக்காடு' 'வேதாரணியம்' என்றும், 'குடமூக்கு' கும்பகோணமென்றும், 'அங்கயற் கண்ணி' மீனாட்சி என்றும் பற்பல தனித் தமிழ்ச் சொற்கள் வடமொழியாக்கப்பட்ட கொடுமையை உணர்ந்தார். 'வடமொழியின்றி என்னருமைத் தமிழ்மொழி இயங்காது என்று கூறுவார் உளரோ?' என்று அறை கூவினர். "இதோ வடமொழிச் சொல் ஒன்றுமின்றித் தனித் தமிழில் நூல்களை இயற்றுகிறேன்" என்றார். ஐம்பதுக்கு மேற்பட்ட அருந் தமிழ்

---

1. அண்மையில் கொழும்புத் தமிழ்ச்சங்கம் கொண்டாடிய மறைமலை அடிகளார்விழாவில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு.

நூல்களைச் செந்தமிழில் இயற்றித் தமிழன்னைக்குப் பெரும் பணிபுரிந்தார். தம்முடைய பெயராகிய "சுவாமி வேதாசலம்" என்பதையும் தனித் தமிழ்ப் பெயராக மாற்றி மறைமலை அடிகள் என அமைத்தார். இவர் தொடங்கிய தனித் தமிழ் இயக்கம் நாடெங்கும் பரவியது. மக்கள் பலர் தங்கள் பெயர்களையும் தனித் தமிழ்ப் பெயர்களாக மாற்றினர்.

## அவமானச் சின்னங்கள்

அடிகளாரைப் பின்பற்றி இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்களிற் பலர் அழகான செந்தமிழ்ப் பெயர்களையே தம் மக்களுக்கு இடுகின்றனர். நம் இலங்கையிலோ இன்றும் நாகரிகம் என்று கூறிக்கொண்டு அருவருப்பான பெயர்களைப் பலர் தம் மக்களுக்கு வைக்கிறார்கள். உஷா, ரஞ்சனி, ஷாமினி, குமார், சிங் என்றெல்லாம் தம் மக்களுக்குப் பெயர் வைப்பவர்கள் தமிழ் இனத்துக்கே மானக்கேட்டை உண்டாக்குகிறார்கள். இந்த அவமானச் சின்னங்களை இனிமேலாவது ஒழித்துவிட்டுத் தமிழ்ப் பெயர்களை வைத்தற்கு நம் மக்கள் முயலுதல் வேண்டும். பெயரில் என்ன இருக்கிறது என்று யாரேனும் கேட்டால், பேசும் மொழியில் என்ன இருக்கிறது என்று கேளுங்கள். சொந்த மொழியென்று ஒன்று இல்லாதவர்களை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. தமிழர் என்று கூறிக்கொண்டு நாகரிக மோகத்தால் அறியாமைச் சேற்றில் புரண்டு தமிழுக்குந் தமிழினத்துக்குந் துரோகஞ் செய்யாதீர்கள் என்றுதான் கேட்கிறோம்.

தமிழின் பெருமைகளையும் தமிழினத்தின் உண்மை வரலாற்றையும், தமிழ்ப் பண்பாட்டின் செம்மையினையும், தமிழிலக்கியத்தின் செழுமையையும், தமிழ் நாகரிகத்தின் அடிப்படைகளையும் இன்றும் நன்கு அறிந்துகொள்ளாதவர்கள் பலர் இருக்கிறார்கள். எனவே மறைமலை அடிகளார் தோன்றிய காலத்தில் — முக்கால் நூற்றாண்டுக்கு முன்னர் — இவற்றைப் பற்றித் தமிழ்மக்கள் எத்தகைய அறிவுடையவர்களாயிருந்திருப்பார்கள் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம். தமிழ்ப் புலவர்களும் அக்காலத்தில்—இக்காலத்திலுள்ள சிலரைப்போல் —உண்மையை உணரவும் எடுத்துரைக்கவும் முயலாமல் கண்மூடித்தனமாகத் தாம் கற்றவற்றையும், ஆராய்ந்து பாராமலே தாம் நம்பியவற்றையும் வைத்துக்கொண்டு கிளிப்பிள்ளைகளைப் போலப் பல தலைமுறைகளாகச் சொல்லி வந்த பொய்களையும், புனைந்துரைகளையும் மீட்டும் மீட்டும் பரப்பி வந்தார்கள். தமிழர்களே — தமிழ்ப் புலவர்களே — தமிழைக் குறைத்துத் தாழ்த்தி வந்தார்கள். "தாய்க் கொலை செய்கிறீர்களே,

தன்மானமின்றி வாழுகிறீர்களே, உமிக்குத்திக் கை ஓய்கிறீர்களே'' என்று உண்மையை எடுத்துக் காட்டுகிறவர்களுக்கு அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் இடமில்லாதிருந்தது.

### தமிழ்த் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்தார்

இந்நிலையில் மறைமலை அடிகளார் இருள் கடியும் இளவள ஞாயிறு போலத் தோன்றினார். தமிழும் தமிழினமும் தமிழர் நெறியாகிய சைவமும் தழைத்தோங்கத் தனித்தோங்க வழி காட்டினார். இவற்றின் உண்மை வரலாற்றைப் பிற மொழிகள், இனங்கள், மதங்கள் முதலியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவும் ஆராய்ச்சியும் உடைய தமிழ்ப் பெருமகன் ஒருவனுடைய உள்ளத்தைத் தமிழ்மக்களிடையேயுள்ள கண்மூடிப் பழக்க வழக்கங்களும் குருட்டுக் கொள்கைகளும் எப்பொழுதும் வருத்திக் கொண்டே இருக்கும் இந்தப் பழக்கவழக்கங்களையும் கொள்கைகளையும் நீக்கித் தமிழினம் பண்டுபோல் இன்றும் இனியும் வாழ வேண்டுமென்று மறைமலை அடிகள் எண்ணினார் இப் பெருந் தொண்டுக்கே தம் வாழ்வினைத் தியாகஞ் செய்தார்

### திருப்பம்

இவருடைய பேச்சும் எழுத்தும் பல்லாயிரக்கணக்கான மக்களுடைய உள்ளங்களிலே ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கின. மக்கள் தங்கள் பெயர்களை மாத்திரமன்றிக் கருத்துக்களையும் கொள்கைகளையும் மாற்றினர். அவர்களுடைய சொல்லிலும்—செயலிலும் எழுத்திலும்—எண்ணத்திலும் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. தமிழன் என்று சொல்வதிலுள்ள பெருமையை அவர்கள் உணர்ந்தார்கள். எம் தாய்மொழி இந்த உலகிலுள்ள எந்த மொழிக்கும் நிகரில்லாத உயர்தனிச் செம்மொழி என்ற உண்மையை உணர்ந்து பெருமிதங்கொண்டார்கள். தமிழர் சால்பும் அதன் கருவூலமாகிய தமிழ் மறையும் தமிழினத்தை உலக நாகரிகத்தின் உச்சியில் ஏற்றி வைத்துள்ளன என்பதைக் கண்டு கண்பெற்ற குருடர்போற் களிப்படைந்தனர். இன்று தமிழகத்திலுள்ள முற்போக்கு இயக்கங்களுக்கெல்லாம் வித்திட்டு அவை வளருதற்கு வேண்டிய எருப் பரப்பி நீர்பாய்ச்சி வைத்தவர் மறைமலை அடிகளாரே எனின் மிகையாகாது.

### 'எல்லாந் தமிழில்' இயக்க முதல்வர்

தனித் தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம், பகுத்தறிவியக்கம், தீண்டாமை ஒழிப்பியக்கம், இந்தி ஒழிப்பியக்கம் தமிழுக்கு எல்லாத் துறைகளிலும் — கோயிலிலும் — முதலிடமளிக்க வேண்டுமெனும் 'எல்லாந் தமிழில்' எனும் இயக்கம்,

அருள் நெறி இயக்கம், தமிழ்மறை இயக்கம், உயிர்ப்பலி நீக்கம் முதலிய நல்லியக்கங்களுக்கெல்லாம் அவரே முதல்வர் என்பதை அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். பழம் பெருங்குடி மக்களாகிய தமிழருக்கு ஒரு தொடர் ஆண்டு வேண்டும் என்றும் அது திருவள்ளுவர் ஆண்டாக அமைய வேண்டுமென்றும் அடிகளார் அறிவுறுத்தினார். அவர் அறிவுரையினை இன்று தமிழகம் ஏற்றுத் திருவள்ளுவராண்டினை வழங்குகிறது. இலங்கையிலுள்ள தமிழரும் திருவள்ளுவராண்டினை வழங்குதற்கு முன் வருதல் வேண்டும்.

மறைமலை அடிகளாரின் புலமையையும், அஞ்சாமையையும், ஆராய்ச்சித் திறனையும் இன்றும் நமக்கு அறிவிப்பன அவருடைய நூல்களேயாகும். எழுத்துப் பிழை, வாக்கியப் பிழை பிறமொழிச் சொல் முதலியன நிரம்பிய நூல்களுக்குப் பல வழிகளிற் பல பாராட்டு விழாக்கள் நடத்துகிறார்கள். இம் முறையில் இதுவரையில் மூன்று பாராட்டு விழாவைப் பெற்ற நூலும் நம் நாட்டிலுண்டு. மறைமலை அடிகளாருடைய நூல்களுக்கு நாம் நாள்தோறும் விழா நடத்தினாலும் அவற்றின் பெருமையை உணர்த்தல் முடியாது. ஆனால், விழாவெடுத்துத் தம் பெருமையைப் பறையடிக்க விரும்பாத பெரியார் அவர். அவருடைய நூல்களுக்கு நாம் செய்யும் மதிப்பு அவற்றைக் கற்று அவற்றின்வழி ஒழுகுவதேயாகும்.

மறைமலை அடிகளாரை நாம் இன்று போற்றுகிறோம் எனின், தமிழின் தனிச் சிறப்பை — தமிழர் பெருமையினை — தமிழ்ப் பண்பாட்டின் உயர்வினை — தமிழ் மறையின் மாண்பினைப் போற்றுகிறோம் என்பதே கருத்து அவருடைய உயர்ந்த தொண்டுகளைப் பொலியச் செய்ய நாம் முயன்றால் நம்மை நாமே உயர்த்துபவர்களாவோம்.

---

## கிடத்தலின் கிடக்கை

[திருவையாறு திரு. இரா. இராமானுசம்.]

"கிடத்தல்" எனின் உணர்வற்றிருத்தல் என்பதாம். இதற்கு, "உயிர்நீத்தொரு மகன் கிடந்தான்" என்பது சான்று. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் நாவுக்கரையர். பணி செய்து இருப்பதே எனின், பற்றோடு இன்புற்று இருப்பதெனப் பொருள் படலின், அங்ஙனங் "கிடப்பதே" என்றார். மேலும் நாவுக்கரையர் கிடந்து உருண்டு தேய்ந்து ஐயாறடைந்த சிறப்புப் பற்றி, உணர்ந்து கூறினார் எனினும் அமையும்.

---

# மாங்காட்டு மறையவன்

[திரு. ஆ. சிவலிங்கனுர், மயிலம்.]

மாங்காட்டு மறையவன் என்பான், சேரநாட்டுக் குடமலைப் பக்கத்தில் உள்ள மாங்காடு என்னும் ஊரில் வாழ்ந்த மறையவனுவான். அவன் இயற்பெயர் தெரியவில்லை. கோசிகமாணி என்ற பார்ப்பனன்போலத் தீமைத்திறம் புரியாமல் உண்மையிலேயே தன் குல ஒழுக்கத்தைக் கைவிடாமல் தீயின் திறம் (யாகங்கள்) புரிந்தவன் ஆவான். திருமால் வழிபாட்டில் ஈடுபட்டவன். இக்காலத்தில் ஐயங்கார் என்ற வகுப்பைச் சார்ந்தவன் ஆவான். என்ருலும் சிவபிரானை வெறுத்தவன் இல்லை. இரக்கமான உள்ளம் உடையவன் "குன்ருச் சிறப்பின் மாமறையாளன்" (சிலப். கக. ௩௩, ௩௪) என இளங்கோவடிகள் புகழ்ந்தனர் அவனை.

ஒருகால் திருவரங்கத் தெம்பெருமான் கிடந்த வண்ணமும் திருவேங்கடத்தான் நின்ற வண்ணமும் கண்டு பயன் எய்த விரும்பி வந்தவன் தென்னுடு வந்து சேர்ந்தான். தென்னவன் நாட்டுச் சிறப்பும் அன்னவன் செயலும் கண்மணி குளிர்ப்பக் கண்டான். அம் மகிழ்ச்சியால் தென்னவனை வாழ்த்திக்கொண்டு வந்தான். தென்னனை வாழ்த்தினுலும் தன் நாட்டு மன்னனை—சேரனை மறந்தான் அல்லன். முதலில்,

> வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
> ஊழிதோ றூழி உலகம் காக்க." (சிலப். கக, கடு, கசு)

எனத் தன் அரசனையே வாழ்த்தினுன். பின்னரே தென்னவனை அவன் முன்னோர் செயல்கூறி வாழ்த்தினுன். மேலேயுள்ள "வாழ்க எங்கோ........காக்க" என்பது தென்னனை வாழ்த்தியதாகவேயாகும் என்பர். அப் பகுதிக்கு உரை யெழுதிய அடியார்க்கு நல்லார் பொதுவாகவே உரை எழுதிச் சென்ருர். தன் அரசனையே ஒருவன் "எங்கோ" என உரிமையால் கூறுவான். அதனுல் மறையவன் முதலில் கூறிய 'எங்கோ' என்றது சேரனையே குறிக்கும். சேரனையோ தென்னனையோ வாழ்த்தினுன் என்பதை யறிய முடியாதபடி பொதுவில் முதலில் "வாழ்க எங்கோ........காக்க" என வாழ்த்தியமை, கேட்டார்க்குத் தென்னனை வாழ்த்தியதுபோல் படவும், தன் உள்ளத்தில் தன் சேரனை வாழ்த்தியதாகவும் அமைந்த சிறப்புடையதாம்.

உறையூரை விட்டுப் புறப்பட்டு மதுரைநோக்கிக் கவுந்தியடிகளுடனும் கண்ணகியுடனும் வந்த கோவலன், வழியில் வளமிக்க ஓர் இளமரக்காவின் மண்டபத்தில் தங்கியிருந்தான்

அப்போதுதான் மாங்காட்டு மறையவன் மேற்கூறியவாறு தன் மன்னனையும் தென்னனையும் வாழ்த்திக்கொண்டு வந்தான். வந்தவனைக் கோவலன், "யாது நுமமூர், இங்கு என்வரவு?" எனக் கேட்டான். மறையவன் தான்வந்த வரலாற்றினைக் கூறினான். தென்னவன் நாடு சென்று வந்ததாகக் கூறக்கேட்ட கோவலன், தானும் அந்நாடு நோக்கியே போதலின் 'மதுரைக்குப் போகும் செந்நெறி கூறுக' என்றான். மதுரைச் செந்நெறி கூறியமுறை மறையவனின் அறிவாற்றலைப் புலப்படுத்தும்.

மூவரையும் கண்ட மறையவன் அவர்கள் மென்மை நிலையுணர்ந்து வழிநடை வருத்தங்கண்டு மனதில் இரக்கம் கொண்டான். அவர்கள் வந்தகாலம் முதுவேனிற் காலம். அதனால்,

"கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியன்நிலம் போல
வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தான்நலம் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவம் கொள்ளும்
காலை யெய்தினிர் காரிகை தன்னுடன்." (சிலப். கக. ௬௦-௬௭)

என வேனிலின் கொடுமை கண்டு இரங்கிக் கூறினான். அவன் இரக்க உள்ளம் விரிவாக—விளக்கமாக மதுரை வழியைக் கூறத் தூண்டியது. அவர்கள் தங்கிய அவ்விடத்திருந்து காடு மலை முதலிய கடந்துசென்றால் சிவபிரான் சூலம்போலப் பிரியும் மூன்று வழிகள் தோன்றும். அம் மூன்று வழிகளும் மதுரைக் கேகும் வழிகளேயாம். அவற்றை விளக்கினான் மறையவன்.

மூன்று வழிகளும் காடு பல கடக்க வேண்டியனவே. வலப் பக்க வழியில் பாண்டியன் சிறுமலை என்பதொன்றைக் கடந்து செல்லவேண்டும். இடைப்பட்ட வழி எளியது; என்றாலும் வழிப்போவாரை மயக்கும் தெய்வம் ஒன்றைத் தப்பிப்போதல் வேண்டும். இடப்பக்க வழி சிறப்பு வாய்ந்தது. அவ் வழியில் தான் திருமாலிருஞ்சோலை மலையுண்டு. அதனிடை ஒரு பிலம் உண்டு. அதனிடைப் புகவேண்டின் திருமால் சேவடி நினைந்து மலையை மும்முறை வலம்வரின் ஒரு பெண்தெய்வம் தோன்றிச் சில வினாக்களை விடுப்பாள்; அவட்குப் பதில் இறுத்தால் அப் பிலத்தின் வாயிலைத் திறப்பாள். அதனுள் நுழைந்து சில வாயில்களைக் கடந்தால் இரட்டைக் கதவுள்ள வாயிலில் ஒரு பெண்தெய்வம் தோன்றி வினவும் வினாவிற்கு விடையிறுக்க வேண்டும். இறப்பின் அத்தெய்வம் அழைத்துச் சென்று

மூன்று பொய்கைகளைக் காட்டிச் செல்லும். அவை புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி எனப் பெயர்பெறும். ஐந்தெழுத்தையும் எட்டெழுத்தையும் மனதில்கொண்டு நீராட வேண்டும். அவற்றில் நீராடின் முறையே அவற்றின் பயன்களாக ஐந்திரவியாகரணம் அறியலாம்; பழம் பிறப்புணர்வு பெறலாம்; நினைத்தது எய்தலாம். மந்திரம் நினையாமல் திருமாலடிகளை நினைப்பின் கருடக் கொடியுள்ள தம்பம் தோன்றக் காணலாம். கண்டு துயர்நீங்கி யின்பம் பெறலாம். இத்தகைய சிறப்புடையது இடப்பக்க வழி. இம் முத்திறவழிகளையும் கூறி, "நான் போகின்றேன்" என்றான் மறையவன்.

மறையவன் கூறிய மூன்று வழிகளில் வலப்பக்க வழி அரிதிற் கடத்தற்குரியது, இடையில் கொடிய கானமும் கடமும் உள ஆதலின். இடப்பக்கவழியும் அத்தகையதே; எனினும் சிறப்புப் பல பெற்றது, தெய்வம் நிலைபெற்றமையால் இடைப் பட்ட வழி ஊர் இடையிட்ட காடு பல உடையது; என்றாலும் செந்நெறியாகும். செந்நெறியாயினும் அந்நெறியில் இயங்குநர்த் தடுக்கும் ஆரணங்குத் தெய்வம் ஒன்றுண்டு. அதைத் தப்பியே செல்லவேண்டும். எனவே இவ்வாறு சிந்தித்து மூன்றனுள் சிறந்த வழி யாதெனத் தேர்ந்துகொள்ள வேண்டுவது கோவலன் பொறுப்பாகும்.

'கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை' என்ற பழமொழி ஒன்றுண்டு. அது கோவலனைப் பொறுத்தவரையில் மிக உண்மையேயாம். இடப்பக்க வழியைப்பற்றி—அங்குள்ள பொய் கைகளைப் பற்றிச் சற்றுச் சிந்தித்திருப்பானாயின் அவன் முடிவு மாறுபட்டிருக்கும். கோவலன் நிலைத்த அறிவினன் அல்லன்; முன்னதாக அறியும் அறிவினனும் அல்லன். மறையவன் கூறியபடி இடப்பக்க வழிசென்று புண்ணிய சரவணம் பொருந்தி யிருப்பானாயின் ஐந்திரவியாகரணம் உணர்ந்து அறிவினனாகி யிருப்பான். அது தவறினான். பவகாரணி படிந்திருப்பானாயின் பழம் பிறப்புணர்ச்சி பெற்று இப் பிறப்பில் கண்ணகியுடன் பிரிந்து வந்த காரணம் அறிந்திருப்பான். அறிந்தானாயின் தான் கொலையுண்ணலும் மதுரை தீக்கிரையாதலும் நிகழ்ந்திரா. இட்ட சித்தி படிந்திருப்பானாயின் சிலம்புகொண்டு பொருளீட்ட எண்ணிய எண்ணத்தை எண்ணியபடி நிறைவேற்றிப் பெரும் பொருளாளனாகி யிருப்பான். எனவே மறையவன் கூற்று கைக் கெட்டிய ஒன்றாம். வாய்க்கெட்டாமைபோல அதனைப் பொருட் படுத்தாமல் தவறவிட்டான். இவன் விடக் கவுந்தியடிகளே காரணராக அமைவர். கோவலன் சமண ஒழுக்கத்தினன் ஆயினும் மறையவன் கூற்றை நினைந்திருப்பானாயின் மனம் மாறி

அதன் வழிச் சென்றிருப்பான்; ஏன் எனின் இவன் நிலையற்ற மனத்தினன். இவன் சிந்தனைக்கு இடம் கொடுத்திலர் கவுந்தியடிகள். வழிவகை கூறிய மறையவனுக்குக் கோவலன் மறுமொழி கூறாதபடி கவுந்தியடிகளே பேசத் தொடங்கினார்.

நல்லன கூறினான் மறையவன். ஆனால் கவுந்தியடிகளால் பொருளற்றவனாக ஆக்கப்பட்டான். ஆவலுடன் வழி கூறிய அவன், இக்கால வழக்கில் சொல்வதானால் கரி பூசப்பட்டான் என்னலாம். "நலம்புரி கொள்கை நான்மறை யாளா," என எடுத்த எடுப்பிலேயே இகழப்பட்டான். அத்தொடருக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரும் அதனை இகழ்ச்சிக் குறிப்பு என்றார். அவ்வாறு இகழ்ந்த அடிகள் மேலும் தொடர்ந்து, "பிலம்புக வேண்டும் பெற்றி எங்கட்கில்லை; இந்திரன் வியாகரணத்தை எம் அருகனின் பரமாகமத்திற் காணலாம்; ஆதலின் புண்ணிய சரவணம் பொருந்த வேண்டுவதில்லை. பழம்பிறப்பில் நிகழ்ந்தனவற்றை இப் பிறப்பில் நிகழ்வனகொண்டு அறியலாம். ஆதலின் பவகாரணி படியவேண்டுவதில்லை. வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்? ஆதலின் இட்டசித்தியும் படியவேண்டுவதில்லை," என்று அவன் கூறிய பொய்கைகளை இழித்துக்கூறி அவனை அவமதித்தார். முடிவாகக் "காமுறு தெய்வம் கண்டடிபணிய நீபோ; யாங்களும் நீள்நெறி படர்குதும்" என்று கூறினார். இவர் கூற்று இவரது இறுமாப்பையே காட்டுகிறது.

நல்லது சொன்னவனுக்கு அல்லது சொன்ன கவுந்தியடிகள் பிறர் யாது செய்யினும் பொறுக்க வேண்டிய துறவுநிலைக்கு ஏற்ப நடவாமல் மாறுபட நடந்தார். சைனசமயத்தில் வைத்த ஆழ்ந்த பற்றுதல் அளவு மீறியதால் வைணவனாகிய மறையவனை அவமதிக்க நேர்ந்தது. கேட்ட கோவலனுக்கு விடையிறுத்தான் மறையவன்; உடனிருந்த அடிகள் வாளா இருப்பதைவிட்டு அவமதித்துப் பேசியது அடிகளின் குறைபாடேயாம்.

மூன்று வழிகளில் இடைவழியை மேற்கொண்டனர் மூவரும். மயக்கும் தெய்வம் ஒன்றும் செய்யாது என்பது எண்ணம் போலும். கவுந்தியடிகள் துறவியர்; கோவலன் மந்திரம் அறிந்தவன்; ஆதலின் துணிந்து மேற்கொண்டனர்போலும். மறையவன் கூறியாங்கு அவ்விடைவழியில் மயக்கும் தெய்வத்தைக் கண்டு தப்பினான் கோவலன். அதுகொண்டு மறையவன் கூற்று உண்மையே என்பது உணரலாம். எங்ஙனமாயினும் உதவி செய்த மறையவன் நன்றிக்குரியவனாகாமல் அவமதிப்புக்குரியனானமை நம்மால் இரங்கப்படும் நிலைமையதே.

# வஞ்சிக் காண்டம்

[திரு. வை. தட்சிணமூர்த்தி பி. ஏ. (ஆனர்சு)]

சிலப்பதிகாரம் ஒரு வரலாற்றுக் காப்பியம். அதன் குறிக்கோள் கண்ணகி வழிபாடு. புகார்க் காண்டம், மதுரைக் காண்டம் எனக் காண்டங்கள் பகுக்கப்பட்டிருப்பதே இக் காப்பியம் அரசியற் சிறப்புப் பெற்ற வரலாற்றுக் காப்பியம் என்பதைக் காட்டுவதாகும். இம் மூன்று காண்டங்களுள் முதல் இரு காண்டங்கள் கதைச் சிறப்பானும், காவிய நயத்தாலும் எளிதில் இனிமை தருவனவாக அமைந்ததுபோலக் காணப்படுகின்றன. அன்றியும் கோவலன் கண்ணகி கதையும் இவ்விரு காண்டங்களோடு முடிவடைகின்றது. வஞ்சிக் காண்டம் சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று கண்ட வெற்றிகள், கண்ணகிக்குக் கோயிலெடுத்தது முதலியனவற்றைக் கூறுகின்றது. செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோ தன் அண்ணனின் புகழ்பாடவே வஞ்சிக் காண்டம் அமைத்தாரோ என்று முதலில் எண்ணத் தோன்றுகிறது நமக்கு. ஊன்றிப் பார்க்கையில் காரணங்கள் வேறாகப் புலனாகின்றது.

உரைசால் பத்தினி கண்ணகியை முடிகெழு வேந்தர் அனைவரும் வணங்கும் காட்சி வஞ்சிக் காண்டத்தில்தான் இடம் பெறுகிறது. சிலப்பதிகாரத்தின் உட்கோளாகிய பத்தினித் தெய்வம் வஞ்சிக் காண்டத்தின் இறுதியில்தான் மலர்ப்பலியும் வாழ்த்தும் பெற்று வரம் தருகின்றது. உரைசால் பத்தினியைத் தெய்வமாக்கி உலக மன்னர்களும், பலரும் வணங்கும்போது தான் சிலப்பதிகாரம் முழுமை அடைகின்றது. அன்றியும் தெய்வமாகக் கொண்டாடப்படும் கண்ணகி புகார், மதுரைக் காண்டங்களில் கோவலனின் பிரிவு, மறைவு இவற்றால் மனித உணர்ச்சி பெற்று விளங்குகிறாள். வஞ்சிக் காண்டத்தில் குறவர்களின் முன்னர் நிற்கும் கண்ணகி நடுநிலை பிறழாச் சாந்தம் உடையவளாய்த் திகழ்கிறாள். இச் சாந்த நிலைதானே தெய்வத்திற்குத் தேவை. பிற எண்வகைச் சுவைகளும் பிற காதைகளில் விரவி வர, எளிதில் எய்தாச் சாந்தம் குன்றக்குரவையில்தான் கூறப்படுகின்றது.

தமிழகத்துப் பிறந்த கண்ணகி முடிகெழு வேந்தர் மூவர் நாட்டிலும் கால்ஊன்றினாள். மூவர்க்கும் உரிய அவளை மூவரா ளிலும் சம நிலையிற் கொண்டு, மூன்று நாட்டின்பேரிலும் மூன்று காண்டங்களை அமைக்கையில் வஞ்சிக் காண்டம் சேரர்க்குச் சேருகின்றது. செங்குட்டுவன் கண்ணகிக்குக்

கோயிலெடுத்து வணங்கிய பின்னர் அவ் வரலாற்றையே கூறும் காப்பியமாக இயற்றப்பட்ட இக் காப்பியத்தில் சேரனின் இமயப் படையெடுப்பு இன்றியமையாத இடம் பெற வேண்டியதா கின்றது.

காப்பியத்தின் கதை முதல் இரு காண்டங்களுள் சரிவர முடியவில்லை. கோவலன் கொலையுண்டபின் மாதவியின் நிலை, அவன் பெற்றோர் நிலை முதலியன வஞ்சிக் காண்டத்தில்தான் அடித்தோழி, தேவந்தி, காவற்பெண்டு முதலியோரின் கூற்றுக் களால் அறியக் கிடக்கின்றன. கவிஞர் நானில மக்கள் வாயிலாகவும் கண்ணகியைப் போற்றுகின்றார். குறிஞ்சி நில மக்களாய குறவர்களின் வழிபாடு குன்றக்குரவை வாயிலாக வஞ்சிக் காண்டத்தில் வருகின்றது.

புகார்க் காண்டம், கண்ணகி - கோவலன், மாதவி - கோவ லன் இவர்கள் பெற்ற இன்பத்தைக் கூறியது. மதுரைக் காண்டம் கவுந்தியடிகள் கூற்று கண்ணகியின் கற்புத்திறம் இவற்றால் அறத்தை விளக்கியது. வஞ்சிக் காண்டம் மன்னன் சேரன் வாயிலாக அரசியலை - பொருளியலைக் கூறுகின்றது. அறம், பொருள், இன்பம் மூன்றின் திறமும் தெரிந்து கூறுவன தானே நிறையுடைய காப்பியங்கள். அன்போடியைந்த காதலைக் கூறிய கவிஞர் வீரத்தை விளக்கவே வஞ்சிக் காண்டம் இயற்று கிறார்.

இவை மட்டுமன்றித் தமக்குள்ளே பூசலிட்டுக் கொண்டு வாழும் மூவேந்தர்களையும் ஒன்றுபடுத்தும் ஒற்றுமைக் காப்பிய மாகச் சிலப்பதிகாரம் தோன்றுவதற்கான வித்து கனக விசயரின் பழிச்சொல், கண்ணகிக்குக் கல் நாட்டுவிழா இவற்றினிடையே தான் ஊன்றிக் கிடக்கின்றது. கல் சுமந்து வந்த கனக விசயரை ஆரியப் பேடியோடனுப்பி இழிவு படுத்தியதை இழித்துப் பேசிய சோழ பாண்டியரைச் சேரன் வெகுள்கிறான். ஆங்கு அமைதியை நிலைநாட்டும் சமாதான தூதனை மாடலன் வந்து சேரனுக்கு அறிவுரை கூறி வஞ்சி நகர் மக்கட்கெல்லாம் வரி விலக்கும் சிறையினின்று விடுதலையும் வழங்குமாறு செய்து, போர்க் கொடியைத் தாழ்த்தி அறக் கொடியை உயர்த்துகின் றான். சிலப்பதிகாரம் மன்னர்கட்கு வழிகாட்டிய சிறப்பைப் பெறுதற்கு இதுவும் ஒரு காரணம்.

வஞ்சிநகர்மக்களால் கண்ணகி வரிப் பாடல்களால் பாராட்டப்படுகின்றாள். அப் பாடல்கள் அக் காலத்தில் வழங்கி யனவாக இருக்கலாம். அப் பாடல்களை அம் மக்களின் வாயி லாகவே நாடகத் திறம்படக் கவிஞர் நமக்குப் பாடிக் காட்டு

கின்றூர். சிறு பாத்திரங்களாய தேவந்தி, கவுந்தி, மாதரி, மாடலன் இவர்கட்கும் கோவலன் கண்ணகிக்கும் உள்ள தொடர்பு வஞ்சிக் காண்டத்தில்தான் ஒளிவீசுகின்றது.

முதல் இரு காண்டங்களில் சமண வைணவ சமயத்தினரால் கண்ணகி வணங்கப்பட்டாள். வஞ்சிக் காண்டத்தில் சைவனுன செங்குட்டுவனுல், பௌத்தம் வளரும் இலங்கை மன்னன் கயவாகுவால் வணங்கப்படுகிறுள். சர்வ சமயத்தினரும் வணங்கும் தெய்வமல்லவா கண்ணகி? முதல் இரு காண்டங்களிலும் மக்கள் வணங்கினுர்கள்; இங்கு மன்னர்கள் வணங்குகிறுர்கள். குடிமக்கள் காப்பியமாகிய சிலம்பில் நெய்தல் நில மக்களின் காட்சி கானல் வரியிலும், முல்லைநில மக்களின் காட்சி வேட்டுவ வரியிலும், மருதக் காட்சி ஆய்ச்சியர் குரவையிலும் தோன்றுகையில் குறிஞ்சி மக்கள் காட்சி குன்றக் குரவையில் காட்டப்படுகின்றது.

செய்திக் கதிரைப்போல் பல நிகழ்ச்சிகளையும் ஒன்றன்பின் ஒன்றுகக் கூறுவதால் பிற இரு காண்டங்களைப்போல் இக் காண்டம் படிப்போருக்கு சுவைமிகத் தருவதாக அமையவில்லை எனினும் உற்றுநோக்கும்போது காப்பிய நிறைவுக்கு, கதைப் போக்கிற்கு, வரலாற்று வளத்திற்கு வஞ்சிக் காண்டம் இன்றியமையாததாகின்றது.

---

## சிந்தனைக்குச் சில

[தொகுப்பு: நாகை - வேலன்]

பொதுமக்களைக் கல்வி அறிவு உடையவர்களாகச் செய்வதே அரசாங்கத்தின் முதன்மையான நோக்கமாதல் வேண்டும்.

—நெப்போலியன்.

பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையைப் பொருத்தே சிறைச்சாலைகளின் அமைப்பும் ஏற்படுகின்றது. பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை குறையக் குறையச் சிறைச்சாலைகளின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

—எச். மான்.

ஒருவன் நடமாடும் பல்கலைக் கழகமாக இருப்பானுகில் அவனைப் பார்த்து 'நீ கல்லூரியில் படித்திருக்கிறுயா' என்று கேளாதே. கல்லூரி அவன் வழி சென்றிருக்கிறதா என்று கேள்.

—இ. எஸ். சாப்பின்.

# பனியும் துனியும்

[வித்துவான், திரு. ச. சுந்தரேசன்]

ஏழ்கடலைத் தன்னுடையாய் ஏற்றதமிழ் மடந்தைத்
தாழ்மடியில் யானயர்ந்து சார்ந்திருந்தேன்—சூழ்கலைகள்
அத்தனையும் போற்றுதமிழ் அன்னையவள் தாலாட்டில்
நித்திரையில் மூழ்கி நிலைத்திருந்தேன்—இத்தரையில்
இன்ப வளத்தில் இனிதிருந்த மக்களெலாம்
துன்ப நிலைசூழச் சோர்ந்திடல்போல்—மன்பதைகள்
துள்ளும் பெருங்களிப்பில் தோய்ந்திருந்த நேரத்தில்
மெள்ளவந்து காரிருளும் மேதினியை—வெள்ளம்போல்
சூழ்ந்து பருகத் தொடங்கியது நீண்டநிலை
ஆழ்ந்து கிடந்தபின்ன ராங்காங்கு—வாழ்ந்த
பறவையினம் தத்தமது பாட்டிசைக்க, மூத்தாள்
'உறவையினி மாலை யுறுவோம்—மறவாய்'என்(று)
ஓர்மொழியைக் கூறி ஒதுங்கியதும் கண்துடைத்துப்
பார்வையிலே வையத்தைப் பார்த்திட்டேன்—சீர்மைபெறக்
கண்ட இயற்கையெலாம் காணவில்லை யவ்வேளை
மண்டுபனி யாங்கே மறைத்ததுவே—எண்டிசையும்
பார்க்கவெனக் கண்கசக்கிப் பார்த்தேன் எனைத்தவிர
பார்க்கவில்லை வேறொன்றும் பன்னுமிடி—யார்க்குமுகில்
போலக் கவிந்ததெல்லாம் போர்த்தியது மேல்செயலை
ஏலத் தொடங்கிடவும் ஏற்கவில்லை—வேலைசெய்வோர்
சூரியனை நோக்கித் துதித்திட்டார் பேரொளியில்
சூரியனும் வந்துபனிச் சூழ்நிலையைப்—பாரினிலே
ஓட்டிவிட்டான். இவ்வுலகில் உள்ளதொழில் செய்திடுவோர்
வாட்டமுறத் தொல்லைபல வந்தடைந்தால்—நாட்டமெலாம்
விட்டொழித்து நெஞ்சம் மிகஅழிவர் துன்பத்தைச்
சுட்டொழிக்க நல்லறிவாம் சூரியனை—இட்டமொடும்
பெற்றிடுதல் வேண்டும் பெரும்பனிக்குச் சூரியன்போல்
உற்றதுனி நீங்க ஒளிவீசும்—நற்றமிழின்
முன்னோர் உரைத்தநல்ல மூதுரைகள் கொண்டுலகில்
இன்னலினைத் தீர்த்தின்ப மேற்றிடுவோம்—சொன்னநிலை
பனியும் துனியும் பலவாம் நம் வாழ்வில்
நனிவாழக் காண்போம் நலம்.

# மறைமலையடிகளின் மணிமொழிகள்

(செல்வி, சிலம்பு - ௩௨, பரல் - ௩, ௧௬௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(௩௨) இந்த மக்கட் பிறவியைக் காட்டினுஞ் சிறந்தது வேறில்லை. கடவுளாலே இந்த நிலவுலகத்தில் படைக்கப்பட்டிருக்கும் எல்லா நன் பொருள்களையும் நுகர்ந்து இன்புறுதற்கும், நமது அறிவை வளரச் செய்து அவ்வறிவின் ஒளியாலே நம்மைப் படைத்த அவ் வெல்லாம் வல்ல கடவுளின் திருவருட் பேரின்பக் கடலில் முழுகி என்றும் அழியாப் பேரின்பத்தை எய்தி இருத்தற்குங் கருவியாயிருப்பது இந்த மக்கட் பிறவியே யாம்.

(௩௩) இம் மண்ணுலகத்தில் அளவின்றிப் பெருகியிருக்கும் பலவகை இன்பங்களையும் நுகர அறியாமல், இன்பம் அல்லாதவற்றை இன்பமாகப் பிறழ உணர்ந்து அவற்றை அடைதற்குப் புகுந்து இம் மக்கட் பிறவியை இழந்தோரும் இழக்கின்றோரும் இழப்போரும் கடல் மணலை அளவிடினும் அளவிடப் படார்.

(௩௪) உடம்பின்கண் உள்ள எலும்பு, தோல், நரம்பு, சதை செந்நீர் முதலான கருவிகள் செவ்வையான நிலையில் இருப்பதுடன், அவ் வுடம்பின் உள் நின்று உலாவும் உயிரின் நினைவுகளுந் தூயனவாயிருந்தால், ஒருவன் சிறிதேறக்குறைய நூறு ஆண்டு உயிரோடிருத்தல் திண்ணம்.

(௩௫) உடம்பில் உள்ள கருவிகள் சீர்குலைந்து போனது தெரியாமல், அல்லது தெரிந்தாலும் அதனாற் பின் விளையுந் தீமை இன்னதென்று பகுத்தறியாமல் ஒருவன் ஒரு பெண்ணை மணஞ் செய்து கொள்வானானால், அவன் தனது சேர்க்கையால் அப் பெண்ணின் உடம்பையும் உயிரையும் நிலைகுலையச் செய்து விடுகின்றான்.

(௩௬) கலப்பாலிலே குற்றின சிறுபிரைத் துளியானது அப்பால் முழுமையும் மாறுபடுத்தித் தயிராக்குதல் போலத், தூய நல்வாழ்க்கையுடைய மக்கள் நடுவிலே ஒருவன் அடைந்த சீர்கேடானது அம் மக்கள் எல்லாரையுஞ் சீர்கெடப்பண்ணும் ஆற்றலுள்ளதாயிருக்கின்றது.

(௩௭) எவ்வளவுதான் தீயநெறியில் யான் ஒழுகினாலும், என் உடம்பு சிறிதுந் தளராதென்று உறுதியாய்ச் சொல்ல எவனுக்கும் நாவெழாது.

(௩௮) நம்மனோர் நற்செயலும் நல்லெண்ணமும் உடையராய் நடந்து, அருந்தல், பொருந்தல், உறங்கல், உடுத்தல் முதலிய வகைகளிலெல்லாம் ஒழுங்காகவுந் துப்புரவாகவும் நடத்தலைக் கைக்கொண்டு வருவார்களானால், அத்தகையோர் அறிவு, இவ் வுலகமெல்லாம் படைத்துக் காத்து வருகின்ற கடவுளின் திருவருளொளியில் இயல்பாகவே அழுந்தி நிற்கும்; அங்ஙனம் அருளொளியில் அழுந்தி நிற்கும் அறிவிலே, பின் வரப்போகுந் தீய நிகழ்ச்சிகள் திண்ணமாய் முற்கொண்டே விளங்கித் தோன்றும்.

(௩௯) நாம் செய்ய வேண்டுங் கடமைகளை வழுவாது செய்து வருதலுடன், இறைவன் றிருவருள் நம்மைப் பாதுகாத்து வருகின்றது என்னும் ஒரு முழு நம்பிக்கையும் நமக்கு இடையறாது உண்டாகுமானால், நாம் சடுதியில் வரும் இடர்களுக்குத் தப்பிப் பிழைப்போமென்பது திண்ணம்.

(௪0) நாகரிகம் மிகுந்து வருவதாகச் சொல்லப்படும் இக் காலத்தில் மக்கள் செய்துவருஞ் செய்கைகள் எல்லாம் பெரும்பாலும் உலக இயற்கைக்கு மாறுபட்டு வருகின்றன. இவ்வாறு இவர்கள் செய்கை மாறுபட்டு வருதலினாற்றான் காலங் குறுகிப் பலவகைப் பிணிகளுக்கும் ஆளாகி மாண்டு போகின்றார்கள்.

(௪௧) நம் முன்னோர் இருந்த இடங்கள் ஆள் நெருக்கம் இல்லாத காடுகளும், மலைகளும், பாலை வெளிகளுங், கடற்கரைகளுமாதலால், அவர்கள் அங்கே தூயதாயுள்ள உயிர்க் காற்றை உள்ளிழுத்து வந்தார்கள்; இப்போது நாமெல்லாம் இருக்கும் இடங்கள் ஆள் நெருக்கம் உள்ளனவாய் இண்டு இடுக்கும் பொந்தும் சகதியும் அழுக்கும் நிறைந்து, இடைவெளி முழுதும் அழுக்கேறப் பெற்றிருத்தலால் நாம் அங்கேயுள்ள நச்சுக் காற்றை உள்ளிழுத்து நமது உடம்பிலுள்ள இரத்தமெல்லாம் நஞ்சாகுமாறு செய்து கொள்கின்றோம்.

(௪௨) ஒருவர் இருக்கும் இடம் எவ்வளவு தூய காற்று உடையதாயிருந்தாலும், அவர் அங்கிருந்த சில நாழிகைப் பொழுதிற்குள்ளெல்லாம் அது நச்சுக் காற்றால் நிரப்பப் படுகின்றமையால், அங்ஙனம் அடிக்கடி வெளிவந்து அழுக்குப் படுத்துங் காற்று அவ்விடத்திலேயே நில்லாமல் மிகு விரைவில் அப்பாற் போகவும், வேறு தூய காற்று தாமிருக்கும் இடத்தில் வந்து நிறையவுஞ் செய்துகொள்ளல் வேண்டும்.

(தொடரும்)

# பல்லாவரம் மறைமலையடிகளார் கடிதங்கள்

## கடிதம் - ௪

**அன்பும் அருங்குணங்களும் நிறைந்த திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கட்கு அம்பலவாணர் அம்மைத் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக.**

28-ஆம் நாள் தாங்கள் எழுதிய அன்புள்ள கடிதம் வந்தது.

தாங்கள் கூட்டப்போகும் சென்னை மாகாணத் தமிழ்ப் புலவர் மாநாட்டுக்கு யான் தங்கள் விருப்பப்படி அவைத் தலைமையை மேற்கொள்ள விரும்பினாலும் இங்கு நடைபெறும் நிலையான தமிழ்த் தொண்டு, சிவத்தொண்டுக்கு அஃது இடையூறுதல் உணர்ந்து அதற்கு இசையக்கூடாதவனாயிருக்கின்றேன். அதற்கு இடையூறு உண்டாதற்கு இடமில்லாதபடி வழிச்செலவுக்கு ஐம்பது ரூபாயும், அத் தொண்டுகள் யான் இல்லாத வேளையிலும் இனிது நடைபெறு தற்காம் செலவுகளுக்கு இருநூறு ரூபாயும் ஆக இருநூற்றைம்பது ரூபா இங்கு முன் அனுப்ப ஏற்பாடு தாங்கள் செய்யக்கூடுமானால் மட்டும் யான் தங்கள் விருப்பப்படி உங்குப்போந்து அச் சிறந்த பணியை யாற்றுதல்கூடும். இதனுடன் அனுப்பியிருக்கும் என்னுடைய நூல் களின் விலைப்பட்டியினால், என் ஒருவனால் இதுகாறும் எத்தனை நூல் கள் அரிதாய்ந்தியற்றி வெளியிடப்பெற்றிருக்கின்றன, எத்தனை இன்னும் அச்சாகிக் கொண்டிருக்கின்றன, இன்னும் எத்தனை அச்சாக வேண்டியிருக்கின்றன, என்பதைத் தாங்கள் அறியலாம். இவ்வளவும் ஓரளவாக ஓர் ஒழுங்காக நடப்பித்து வருதலின் எமக்கு ஒரு திங்களுக்கு இருநூறு ரூபா வரையிலும் செலவாகின்றன. விரைந்து நடப்பித்தால் ஐந்நூறு ரூபாவுக்குமேற் செலவாகும்.

இவ்வளவு செலவுக்கும் யான் இங்கிருந்தாற்றான் ஈடு கட்டல் முடியும். யான் வெளியே பணியாற்றச் சென்றால் இங்கு நடைபெறும் தொண்டு தடைப்படும். இங்குள்ள அச்சுவேலைக்காரர்கட்கும், பிறர்க்கும் சம்பளம் கொடுத்தே தீரவேண்டும். வெளியூர் சென்று வந்தால் எமது உடம்பின் அயர்வு தீர்த்துக்கொண்டு திரும்ப இங்குள்ள தொண்டைத் தொடங்குதற்குப் பலநாட்கள் செல்கின்றன. நோய்ப் பட்டாலும் பெருந்தொல்லை, வீண்செலவு மிகுதி. ஆதலால் இவ்வள வுக்கும் ஈடு கட்டத்தக்க வளவு பொருள் அனுப்பியழைக்கும் இடங் கட்குத்தாம் யான் பணியாற்றச் செல்வது சென்ற இருபத்திரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது.

ஆங்கில நூலாசிரியர்க்குப் பலவகையாலும் பொருள் உதவி கிடைத்தல்போல் நம் நாட்டு ஆசிரியர்க்கும் கிடைத்தால் அளவிறந்த

நலம் உண்டாம். ஆனால் தமிழ் கற்றார்க்கும் நூலாசிரியர்க்கும் பொருள் உதவி செய்வார் இலர் என்பது தாங்கள் அறிந்ததே. இந்நிலையில் யாம் ஏதுசெய்தல் கூடும். இயன்ற தொண்டை ஓளிப்பின்றி நாற்பது ஆண்டுகளாக யாம் செய்து வருதல் திருவருள் அறியும். தங்கள் விருப்பப்படி யான் வருதலியலாமைக்கு வருந்தாதீர்கள். நலம்.

அன்புள்ள,

மறைமலையடிகள்

## 'நடராசர் தரிசனம்' பற்றிய மதிப்புரை

### கடிதம் - கூ

திருவாளர் சுரேந்திரநாத் ஆரியா அவர்கள் தாம் தமிழில் எழுதிய "ஸ்ரீ நடராஜ தரிசனம்", என்னும் நூலை எமது பார்வைக்கு அனுப்பி வைத்தமைக்காக அவர்கட்கு நன்றி செலுத்துகின்றேன். இப்போது எமக்குள்ள பல வேலைத் தொல்லைகட்கு இடையே அதனை முற்றும் படித்தல் இயலவில்லையாயினும் அரைவாசியாவது படிக்கக் கிடைத் தமைக்காக மிக மகிழ்கின்றேன். படித்த வரையில் இந்நூல் அம்பலக் கூத்தன் அருள் அடையாள உண்மைகளை நன்கு எடுத்து விளக்கி எல்லாம்வல்ல இறைவன் அடியார்க்கு எளியனாயும், எல்லா உயிர்க ளிடத்தும் எல்லையற்ற இரக்கமும், அன்பும், அருளும் உடையனாயும் அவ்வுயிர்களின் நலத்தையே கோரித் தன் பெருமையைத் தான் அறியா னாயும் நிற்கும் விழுமிய நிலைகளைச் சைவசித்தாந்த நூற்கருத்துக்கு இசைய வைத்து அறிவுறுக்குந் திறத்ததாய் மிளிர்கின்றது. இந்நூலின் உரைநடை இடையிடையே சொற்பொழிவின் நடைநலம் வாய்ந்து உள்ளக் கிளர்ச்சியினை விளைவிக்குந் திறத்ததாயும் விளங்குகின்றது. ஆரியா அவர்கள் தெலுங்கு நாட்டிற் பிறந்து வளர்ந்து வடமொழிக் கலப்பு மிகுதியும் உடைய தெலுங்கு மொழியையே பயின்றவராகை யால், இப்போது தாம் புதிது பயின்று வரும் தமிழில் எழுதியிருக்கும் இந்நூல் வடசொற் கலப்பு மிகுதியும் உடைத்தாயும், ஆங்காங்கு இலக்கணப்பிழை உடையதாயும் காணப்படுகிறது. அடுத்த பதிப்பில் இவ்விரண்டு குறைபாடுகளையும் நீக்கிவிடுவார்களாக. அரும்பொருள் பொதிந்து விளங்கும் இந்நூல் நமது செந்தமிழ் அன்னைக்கு ஓர் சிறந்த அணிகலமாய்த் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மறைமலையடிகள்

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) 'தமிழ்நாடு' எனப் பெயரிடாதது தவறு

கடந்த 17-11-57-இல் மதுரை திருவள்ளுவர் கழகச் சார்பில் நடைபெற்ற வ. உ. சிதம்பரம் பிள்ளை நினைவுநாள் விழாவிற்குத் தலைமை தாங்கிய திரு எல். கிருட்டிணசாமி பாரதியவர்கள் பேசிய காலை, "தொல்காப்பியம் முதல் பல இலக்கியம் வரை 'தமிழ்நாடு' என்னும் சொற்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதை உணராமல் நம் பகுதிக்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டாதது தவறாகும்" என்று கூறியுள்ளார்.

**குறிப்பு:** ஆம்; இஃது உண்மையே. இலக்கண இலக்கியம் உணராதோர் ஆட்சிப் பீடம் ஏறியதன் விளைவாகவே 'தமிழ்நாடு' இன்னும் அதற்குரிய பெயரையும் சிறப்பையும் பெறவில்லை. எனவே இனி ஆட்சியாளருக்கு இலக்கிய எடுகளைச் சான்றுகாட்டிப் பயனில்லை. நாட்டு மக்களின் உள்ள உறுதிப்பாட்டைக் காட்டியே 'தமிழ்நாடு' கேட்க வேண்டும் போலும்!

## (உ) மொழிப்பற்றும் மொழிவெறியும்

கடந்த 4-12-57-இல் மேரி அரசிக் கல்லூரியில் நடைபெற்ற சென்னைக் கல்லூரி மாணவர் தமிழ் மன்றத்தைத் துவக்கி வைத்த தமிழக முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள்,

> "மாணவர்களுக்குத் தமிழ்ப்பற்று ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்................தமிழ்மொழிப் பற்று மொழிவெறியாக மாறிவிடக் கூடாது" என்று பேசியுள்ளார்.

**குறிப்பு:** அறிவுரை அழகான அறிவுரைதான். எனினும் பற்று வெறியாக மாறுவது ஏன்? எப்படி? எப்பொழுது? என்பதை அமைச்சர் போன்றோர் உய்த்துணர்தல் வேண்டும். நாட்டுப்பற்று மொழிப்பற்று இனப்பற்று முதலியவற்றின் வரலாறு வளர்ச்சி ஆகிய வற்றை ஆராய்ந்து அறிந்து ஆவன செய்யவேண்டுவது அரசியலார் கடன் அதனை மறந்து ஆளுவோர் நாம் என்னும ஒரே நோக்கோடு பேசியும் நடந்தும் வந்தால் பற்று வெறியாக மாறாமல் என் செய்யும்?

## (ங) மைய அரசியலார் போக்கு

கடந்த 24-11-57-இல் காஞ்சிபுரம் நகராண்மைக் கழகத்தில் டாக்டர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கட்கு வரவேற்பளிக்கப்பட்டது. அதுகாலை அவர் பேசியபோது,

> "இந்திய மைய அரசியலார் மாநிலங்களுக்குப் போதிய ஆட்சிப் பொறுப்பினை வழங்காமல் உள்ஆட்சிக் கழகங்களைப்போல் நடத்து கின்றனர். இது தவறான போக்கு. இந்நிலை மாறவேண்டும்" என்று பேசியுள்ளார்.

**குறிப்பு:** மைய அரசியலார் மாநிலங்களை நகராண்மைக் கழகங்களாக மதித்து நடத்துகின்றனர். பெருத்த வருவாய்கள் அனைத்தும் மைய அரசுக்கே சென்றுவிடுகின்றன. இதனால் மாநிலங்களின் மொழி, பொருளியல், மக்களியல முதலியன பெரிதும் ஊறுபடுத்தப்படுகின்றன. இதனைச் சுட்டிக் காட்டாத அரசியல் அறிஞர்கள் இலர். எனவே ஆட்சியாளர் எதிர்கால நிலை உணர்ந்து மாநிலங்கட்கு, அதிலும் சிறப்பாகத் தமிழகத்துக்கு போதிய ஆட்சிப்பொறுப்பினை வழங்குவார்களாக.

## (ச) தமிழக மக்கள் எண்ணிக்கை 3 கோடி

மாநிலச் சீரமைப்புக்குப் பின் கணக்கிடப்பட்ட மக்கட் டொகைக் கணக்குப் பற்றிய அறிக்கையை இந்திய அரசியலார் அண்மையில வெளியிட்டனர். அதன்படி தமிழகத்தின் மக்கட் டொகையும் பிற மாநிலங்களின் மக்கட் டொகையும் பின்வருமாறு :

ஆந்திரப் பிரதேசம் அமைக்கப்பட்டு, சில பகுதிகள் மாற்றப்பட்ட பின்னர், சென்னை மாநிலத்திலுள்ள மக்களின் எண்ணிக்கை, 5 கோடி 70 இலட்சத்திலிருந்து 3 கோடியாகிவிட்டது. அசாம் மாநிலந்தான் மிகவும் குறைந்த அளவு மக்கள் எண்ணிக்கை அஃதாவது 90 இலட்சம் ஆகும்.

மாநிலவாரியாக மக்கள் எண்ணிக்கை வருமாறு:—

ஆந்திரா 3,10,00,000, பீகார் 3,80,00,000, கேரளா 1,30,00,000, மத்தியப்பிரதேசம் 2,60,00,000, மைசூர் 1,19,00,000, ஒரிசா 1,40,00,000, பஞ்சாப் 1,60,00,000, இராசஸ்தான் 1,60,00,000, மேற்கு வங்காளம் 2,60,00,000,

தற்போதுள்ள கணக்குப்படி இந்தியாவில் பரப்பளவில் மிகப் பெரிய மாநிலம் பம்பாய், மிகச் சிறிய மாநிலம் கேரளம்.

## (ரு) பாடநூல் வெளியிடலா? கட்சிப் பணி செய்தலா?

“பாடநூல்களை அரசினர் வெளியிட முன்வருவது பல தொல்லைகளை உண்டுபண்ணும். ஆளுங் கட்சியினரின் கட்சிப் பிரசாரமாகவே பாடநூல்கள் அமைந்துவிடக் கூடிய தீமையும் உண்டு. அது எத்தனையோ குழப்பங்களை எழுப்பக் கூடும்.” என்று கடந்த 12-11-57-இல் தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் நடைபெற்ற புத்தக வெளியீட்டுவிழா ஒன்றில் பேசிய டாக்டர், சி. பி. இராமசாமி ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**குறிப்பு:** பாடநூல் வெளியிடுதலில் அரசியலார் நோக்கம் யாதாயிருக்கும் என்பதை ஒருவாறு சுட்டிக்காட்டிய திரு. ஐயர் அவர்களைப் பாராட்ட வேண்டியதே. நுணுகிப் பார்க்கும் அரசியல் அறிவுபடைத்தோர் அனைவரும் இதன் உண்மையை ஒருவாறு உணரக்கூடும்.

# மதிப்புரை

**(க) "ஸ்ரீ மெய்கண்ட வேலாயுதசதகம், திருப்புகழ்"**

[இச் சீரிய அருள்நூல்கள் இரண்டும் ஒருங்கமைந்த திருநூல் ஒன்று வரப்பெற்ருேம். இந் நூல் திருநாகப்பட்டினத்தில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் 'திரு மெய்கண்ட வேலாயுதரென்னும் குமாரக்கடவுள்' மீது அக் கடவுளின் திருவாணையின்வழி அவர்தம் திருவருளால் பாடப்பெற்றதாகும்.]

இந் நூலைப் பாடிய அருட்புலவர், **அருட்கவி அழகுமுத்துப் புலவர்** ஆவர். இவர்தம் திருவரலாறு திருவருள் நிரம்பிய அருவரலாறு ஆகும். இவ் வரலாறு மிக அண்மையில் நிகழ்ந்த தொன்ருகையால் இந்நாள் உலகத்திற்குப் பெரிதும் பயன்படுவதொன்ருகும். இந் நூலை விலையில் வெளியீடாக வெளியிடும் மெய்யன்பர் நாகப்பட்டினம் திரு. நா. வீரப்பச் செட்டியாரும் அவர்தம் உடன்பிறப்பினருமாவர். இவர்கள் செய்யும் இத் திருத்தொண்டு காலத்தினுற் செய்த நன்றிசால் பெருந்தொண்டாகும்.

அருட்புலவர் அவர்களின் திருத்தோற்றம் நாகப்பட்டினமாகும்; மரபு சேனைத்தலைவர் மரபாகும். தந்தையார், அம்பலவாணச் செட்டியார். தாயார், சிவகாமசுந்தரி அம்மையார். பிறந்தநாள் வைகாசித் திங்கள், விசாக நன்னுள். தந்தையார் மெய்கண்டவேலாயுதர் திருக்கோவில் மெய்காவலர் பணிசெய்து வந்தனர். இவர்தம் காலம் கி. பி. பதினேழாம் நூற்ருண்டெனக் கூறப்படுகிறது. இவர் கல்வி பயிலாதவர்; நோயுடம்பினர்; எல்லா நற்பண்புகளும் ஒருங்கு நிறைந்த நல்லொழுக்கினர். திருவருள் உந்துதலால் தம்முடைய பதினுருட்டைப் பருவத்துக் குமரக் கடவுள்மீது கழிபெருங் காதல்கொண்டனர். அவாதம் அருமறையாம் ஆறெழுத்தினை அவர்தம் திருமுன்னிருந்து நாளும் உருவேற்றும் நற்ருெண்டு புரிந்துவந்தனர். தந்தையார் செய்துபோந்த திருக்கோவிற் திருப்பணியையும திறம்படச் செய்துவந்தனர். உள்ளத் துறவினராய் ஓங்கினர். ஒருவேளை மட்டும் உண்ணும் நோன்பொழுக்கினையும் கைக்கொண்டனர். அதுவும் மெய்கண்ட வேலவர்க்கு நள்ளிரவில் குழைத்த (நைவேத்தியம் செய்த) படைப்பமுதே யாகும்.

திருவருள் நோக்கத்தால் ஒருநாள் ஊர்திகள் வைப்பிக்கும் திருவறையிற் சென்று நம் அருட்புலவர் அயர்ந்து தூங்கிவிட்டனர். கோவிலார் வழக்கம்போல் இவரை அழைத்தனர்; வரக்காணுமையால் வீடு சென்றிருத்தல் கூடுமென எண்ணித் திருக்கோவிலினைத் திருக்காப்பிட்டுப் போயினர். பின் நம் அருட்புலவர் பசி தாங்காது விழித்து முருகனை வேண்டினர். மெய்கண்ட வேலவர் சார்புருவில் தோன்றித் திருவமுதளித்துப் பசி தணித்தருளினர். பின் தம்மைப் பாடுமாறு பணித்தனர். எங்ஙனம் பாடுவேனென்று நம்புலவர் பெருமான் பணிந்த மொழியான் வினவியபோது, சிறப்பாம் ஒளியுருவினைக்காட்டி மறைந்தருளினர் அப்பொழுது பாடப்பெற்றனவே யாகும் இவ்விரு நூல்களும் என்று தெரிகின்றது.

சில ஆண்டுகள் கழித்தபின் நம் அருட்புலவர் திருவூர்கள் பலவற்றையும் கண்டு தொழுவான் வழிநடை மேற்கொண்டனர். வடபெருங்கல் (இமயம்) முதல் தென் பெருங்கடல்வரையுள்ள திருவூர்கள்

தோறும் சென்று செந்தமிழ் வழிபா டியற்றி இறுதியாகச் சீர்காழித் திருப்பதிவந்து சார்ந்தனர். ஆண்டுள்ள அவர்தம் மரபினர் திருமடத்தில் சின்னாள் தங்கித் திருக்கோவில் வழிபாடு புரிந்துகொண்டிருந்தனர். ஒரு சித்திரைத் திங்கள் சதய நன்னாளில் மெய்கண்ட வேலவர் திருவடியை மேவினர். இந் நிகழ்ச்சி சீர்காழியில் நிகழ்ந்ததாயினும், அப்பொழுதே நாகை மெய்கண்ட வேலவர் திருக்கோவிலினுள் நம் அருட்புலவர் நுழைவதாகிய தோற்றம் புலனாயிற்று; பின் வெளிவரக் கண்டிலர். கோவிலார் திகைத்தனர். உறவினர்பால் உசாவினர்; உண்மை யோர்ந்தனர். வேலவர் திருவடியில் இரண்டறக் கலந்தனர் எனத் தெளிந்தனர். நம் அருட்புலவரின் திருவுருவெடுப்பித்து வழிபா டாற்றினர். அஃது இன்றுகாறும் நிகழ்ந்து வருகின்றது.

நூல் செந்தமிழ் மணமும் திருவருட் பொலிவும் செறிந்து திகழ்கின்றது. ஓதுவார் உள்ளத்தைக் குழைத்து உருகுவிக்கும் தன்மையது. பல வரலாறுகள் பொதிந்துள்ளது. மறைமலையடிகளாரின் நினைவுக் காணிக்கையாக வெளிவருவது. பொதுவாகச் செந்தமிழன்பர்களும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் அன்புடன் ஓதி இன்புறுவார்களாக.

## (உ) 'அழுது அடியடைந்த அன்பர்'

[இதன் ஆசிரியர் உயர் திருவாளர் ஓய்வுபெற்ற தமிழாசிரியர் திருசிரபுரம், பெருஞ்சொல் விளககனார் முதுபெரும்புலவர், அ. மு. சரவண முதலியாரவர்கள் ஆவர். வெளியீட்டாளர் அரியலூர் மணிவாசக மன்றத்தார். விலை ரூபா. 1-8-0.]

இதன்கண் ஆசிரியரவர்கள் ஆராய்ச்சிமுறையாக நன்காய்ந்து மாணிக்கவாசக அடிகளாரின் வரலாறும், திருவாசகச் செழும்பாட்டுகளின் வைப்புமுறையும் அகச்சான்று புறச்சான்றுகளுடன் நடுநிலையாளர் அனைவர்களும் ஒப்புக்கொள்ளும்படி துணிவுபெற அமைத்துள்ளார்கள். மேலும் சிறந்த பாட்டுகளின் பொருள்நயம், உவமைநயம், உள்ளுறைச் சிறப்பு, புகழ்நூல் பொருள் நூல்களாகிய தோத்திர சாத்திர மேற்கோள், அவற்றுடன் இயையும் இயைபு, செம்பொருட் டுணிவாம் சித்தாந்த நுணுக்கங்கள் பலவும் தெளிய அமைத்துள்ளார்கள். 'கண்ணப்பநாயனார் திருவரலாற்றை' அடிகள் வரலாற்றுடனும் திருப்பாட்டுடனும் இணைத்தும் புத்தம் புதிய கருத்துக்களுடன் விளக்கியுள்ளார்கள். காந்தயடிகளார் வாய்மைக் கருத்துக்களும் பொருத்தமான இடத்து இணைக்கப் பட்டுள்ளன. பல அழகிய திருவுருவப்படங்கள் ஆங்காங்கு அணிசெய்கின்றன.

எளிய இனிய நடை, பல திருப்பாட்டுக்கள், பலநூல் மேற்கோள்கள் விளங்குகின்றன. இந்நூலைச் செந்தமிழன்பர்களும் செந்நெறிச் செல்வர்களும் வாங்கியும், வாங்குவித்தும், கற்றும், கற்பித்தும் இன்பெய்துவார்களாக.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.